Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 19 செவ்வாய்க்கிழமை (02.06.2015) பக்கங்கள் 20 ஓசை – 245

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## வருவார் ஒபாமா



(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வெகு விரைவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தத் தகவலை வெளிவிவகார அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய வெளிவிவகாரப் பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அல்லது இந்நாட்டின் வேறு தலைவர்கள் அமெரிக்காவிற்கு செல்வது வழமை.

எனினும் அமெரிக்க ஜனாதிபதி இலங்கைக்கு விஜயம் செய்வதானது மிகவும் பெறுமதியான விடயம் என பிரதியமைச்சர் கூறினார்.

இலங்கையில் இடம்பெற்ற

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஆயுத கலாசாரம் வேண்டாம்

(யாழ்ப்பாணம்)

மீண்டும் இனந்தெரியாத ஆயுததாரிகள் தலைதூக்குகின்றனரா? கடந்த காலங்களில் இனந்தெரியாத நபர்களின் பல்வேறு சமூக விரோத செயற்பாடுகளினால் எமது சமூகம் பட்டிருந்த வேதனைகள் ஏராளம். அந்த நிலை தற்போது மாறியுள்ள சூழலில் மீண்டும் இனந்தெரியாத ஆயுததாரிகள் தலைதூக்கியுள்ளமை எமது சமூகத்தை மீண்டும் அச்சத்தில் ஆழ்த்தும் செயலாகவே உள்ளது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, மண்டூர் பகுதியில் சமூக சேவையாளரான சத்தியனந்தன் மதிதயன் என்பவர் கடந்த 26 ஆம் திகதி தனது வீட்டில் இருந்த நிலையில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது. இச்செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனத் தெரிவித்துள்ள டக்ளஸ் தேவானந்தா, மீண்டும் எமது தாயகப்



குதிகளில் இவ்வாறான செயல்கள் தொடரா திருக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன், மேற்படி கொலையுடன் தொடர்புடைய நபர்கள் இனங்காணப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்பட உரிய தரப்பினர் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இனந் தெரியாத நபர்கள் என்ற பீதி கடந்த காலங்களில் எமது மக்களை நிம்மதி இழக்கச் செய்திருந்தது. அதனை மீண்டும் தோற்றுவிக்க ஏதேனும் தீய சக்திகள் முயற்சித்தால் எமது சமுதாயம் அதனைத் தாங்கிக் கொள்ளக் கூடிய சூழ்நிலையில் இல்லை என்பதால் இதற்கொரு முற்றுப்புள்ளியை வைக்க அரசு முன்வரவேண்டும் எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புங்குடுதீவு கொலை வழக்கு

# விளக்க மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி படுகொலை வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது காரசாரமான கேள்விக் கணைகள் தொடுக்கப்பட்டன.

கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் மிகவும் பரபரப்பான சூழலில் கொலைச் சந்தேக நபர்கள் ஒன்பது பேரும் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அங்கு சிறு பதட்டம் நிலவியது. நீதிமன்ற அமர்வின் போது மாணவியின் பெற்றோர் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணிகள் சில காரசாரமான கேள்விகளைக் கேட்டனர்.

தொடர்ந்து புங்குடுதீவுப் பாடசாலை மாணவியின் படுகொலையுடன் தொடர்புடைய மேற்படி சந்தேக நபர்கள் 9 பேரையும் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

இவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு இந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவியை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தி கொலை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் நேற்று மீண்டும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போதே இவர்களை மீண்டும் விளக்கமறியலில் வைக்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பாக்.தளபதி கொழும்புக்கு

(கொழும்பு)

பாகிஸ்தான் இராணுவத் தளபதி ராஹில் ஷெரீப் எதிர்வரும் ஐந்தாம் திகதி கொழும்பு வருகிறார்.

ஐந்து நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வரும் இவர், எதிர்வரும் 9ஆம் திகதிவரை இங்கு தங்கியிருப்பார். என்று தெரிவிக்கப்படுகிறது.

## மகிந்த சகிதம் ஷிராந்தி



## 2 மணி நேரம் விசாரணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷவிடம் பொலிஸ் நிதி மோசடி வீசாரணை பிரிவினர் நேற்று திங்கட்கிழமை சுமார் 2 மணிநேரம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக பொலிஸ் விசாரணைப் பிரிவுக்குச் செல்லாமல் சபாநாயகரின். உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் வைத்து வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. விசாரணைக்கு சமுகமளிக்கும் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுடனேயே வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


## இது சட்ட விரோதமானது

(கொழும்பு)

தற்போது ஊழல் மோசடி விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிதி மோசடி தவிர்ப்பு பிரிவும் அது மேற்கொள்ளும் விசாரணைகளும் சட்டவிரோதமானது என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தப்பிரிவு அரசியல் பின்னணியில் இயங்கிவருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பொலிஸ் மா அதிபரின் விசேட வர்த்தமானியின் மூலம் 2015 ஆம் ஆண்டு



பெப்ரவரி 13 ஆம் திகதியன்று இந்தப்பிரிவு இயங்க ஆரம்பித்தது. இந்தநிலையில் குறித்த

(19) ஆம் பக்கம் பார்க்க



## சுஷ்மாவின் சீற்றம் கொழும்பு மீது

பக்.14

## கிளிநொச்சியில் நேற்றும் கண்டனப் பேரணி

(கிளிநொச்சி)


புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகளை கண்டித்தும் நேற்று கிளிநொச்சி பழைய கச்சேரிக்கு முன்பாக கிளிநொச்சி மாவட்ட மகளிர் சம்மேளனம், சிறகுகள் பெண்கள் பண்பாட்டு அமைப்பு என்பன அமைதி வழி கறுப்புப்பட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.






சாவகச்சேரி விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய இரதோற்சவம் நேற்று இடம்பெற்ற போது....

(படங்கள்-ஆர். இராஜகுமார்)



# ஆசிரியர்களின் இடமாற்றத்தினால் சிரமத்தில் கிராமப்புற பாடசாலைகள்

## சுட்டிக்காட்டுகிறார் சந்திரகுமார் எம்.பி.



கடந்த 2013 செப்ரெம்பர் மாதத்திற்குப் பின்னர் வன்னிப் பெருநிலப்பரப்பில் இயங்கும் கிராமப்புற பாடசாலைகள் ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன. அது மட்டுமன்றி முன்பு பின்தங்கிய பாடசாலைகளில் சேவையாற்றி வந்த ஆசிரியர்களும் வடக்கு மாகாண சபையின் வருகைக்குப்பின் இடமாற்றங்களைப் பெற்றுக்கொண்டு சென்றுவிட்டார்கள். என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்

நேற்று முன்தினம் முட்கொம்பனில் 2014 விசேட நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட சந்திரோதயம் மாலை நேரக் கல்வி நிலையத்தினை திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்

இன்றும் பல கிராமப்புற பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறைகள் நிவர்த்தி செய்யப்படவில்லை. நாம் மாணவர்களை சந்திக்கின்ற சந்தர்ப்பங்களில் அவர்கள் மிகவேதனையுடன் இந்த நிலையினை சுட்டிக்காட்டுகின்றனர். அத்தோடு மாணவர்கள், ஆரிசியர்கள் உள்ள பாடசாலைகளைத் தேடிச்சென்று கற்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

ஆனாலும் வடக்கு மாகாணத்தின் கல்விக்கு பொறுப்பான அரசியல் தலைமைத்துவம் இவ்விடையத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதுமட்டுமன்றி கிராமப்புற பாடசாலைகள் தரமுயர்தப்படுவதிலும் அவர்கள் கரிசனை காட்டுவதில்லை ஏனெனில் கல்விக்காக அலைந்து திரியும் கிராமப்புற மாணவர்களின் நிலைமைகளை அவர்கள் உணர்ந்துகொள்வதில்லை. ஆகவே மாணவர்கள் தமது அதி உச்ச பெறு பேறுகளினூடாக கிராப்புற மாணவர்களின் கல்வியில் அக்கறை காட்டத்தவறிய வர்களுக்கு பாடம் புகட்ட வேண்டும்.

முட்கொம்பன் போன்ற பின்தங்கிய பாடசாலைகளிலும் க.பொ.த உயர்தரத்தில் கலைப் பிரிவுடன் நின்றுவிடாமல் கணித, விஞ்ஞானப்பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட வேண்டும் அப்போது தான் கிராமங்களிலிருந்தும் பொறியியலாளர்களும் வைத்தியர்களும் உருவாகமுடியும் அதுவே கிராமங்களையும் வளர்சிப்பாதையில் இட்டு செல்வதற்கு வழிவகுக்கும்

கடந்த காலங்களில் நாம் மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் கல்விக்காக ஏங்கும் மாணவர்களின் நிலையினை ஆசிரியர்களுக்கு தெளிவுபடுத்தியும் கிராமப்புற பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை கொண்டு வந்திருந்தோம். ஆனால் இன்று அந்த நிலைமை இல்லை ஆசிரியர்கள் வரமறுக்கின்ற சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. அவாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான செயற்திறன் அவர்களிடம் காணப்படாமையும் முக்கிய காரணமாக அமைகின்றது.

இருந்தும் நாம் கிராமப்புற பாடசாலைகளுக்கான ஆசிரியர் வளத்தை பெற்றுக்கொள்வதற்காக தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றோம் நாடாளுமன்றத்திலும் இதுதொடர்பாக குரல் எழுப்பி வருகின்றோம். வடமாகாணத்தில் ஆசிரியர்கள் மேலதிகமாக இருக்கின்ற நிலைமையில் ஏன் கிராமப்புற பாடசாலைகளுக்கு மட்டும் ஆசிரியர் வளம் சரியாக பங்கீடு செய்யப்படுவதில்லை என்பதையே நாம் வலியுறுத்தி கேட்கின்றோம்.

மக்களின் தேவைகளை நிவர்த்திசெய்து தரும்பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளிடம் உள்ள போதும் அதைப்பயன்படுத்தி முன்னேறவேண்டிய கடப்பாடுடையவர்களாக மக்கள் உள்ளனர் ஏனெனில் இவ்வாறான செயற்திட்டங்கள் இலகுவாக மக்களுக்கு கிடைப்பதில்லை ஒவ்வொரு செயற்பாடுகளுக்குப் பின்னணியிலும் மிகக்டினமான உழைப்பு செலுத்தப்பட்டிருக்கின்றன அதனடிப்படையில் இன்று மக்கள் எதிர்கொண்ட பல தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன ஆனாலும் இன்னும் பல தேவைகளுடனும் பிரச்சினைகளுடனுமே மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர் எனவே மக்களின் தேவைகள் அனைத்தும் மிக விரைவாக நிவர்த்தி செய்யப்பட்டு நிறைவான சமூகமாக எமது இனம் மாற்றம் பெற வேண்டும் அதற்காக தொடர்தும் எமது மக்கள் பணியை முன்னெடுப்பதற்கு நாம் தயாரா இருக்கின்றோம்.

கல்வி மேம்பாட்டை இலக்காகக் கொண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் பல செயற்பாடுகளை முன்னெடுத்திருக்கின்றோம் அவற்றில் ஒரு அங்கமாகவே இந்த மாலைநேரக் கல்வி நிலையங்களின் உருவாக்கமும் அமைந்துள்ளது எனவே மாணவர்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களை சரியாகப்பயன்படுத்தி கல்வியில் முன்னேற வேண்டும். எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சரிவடைகிறது தேங்காய் விலை

யாழ்.குடாநாடு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தேங்காயின் விலை குறைவடைந்து வருகிறது.

கடந்த இரு மாதங்களாக வளர்ச்சிப் போக்கில் காணப்பட்ட தேங்காய் விலை குறைவடைந்து வருகிறது. தற்போது தேங்காய் விலை 40 தொடக்கம் 80 வரையில் மாத்திரமே விற்பனையாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (66)

# குருபூசை நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

வண்ணை கந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரின குருபூசை நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வானது சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.15 மணியளவில் ஆலயமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அதிபர் நயினை சி.சோமேஸ்வரபிள்ளை வரவேற்புரை நிகழ்த்தவுள்ளார். இந்நிகழ்வு சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் தலைவர் இரா.செல்வவடிவேலின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக திருமறைச் செல்வன் சி.கிருஷ்ணமூர்த்தி கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் திருமுறை மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இறுதியாக சொ.முகுந்தன் நன்றியுரை வழங்குவார்.

# இந்தியப் பிரஜை இளவாலையில் கைது

யாழ் இளவாலைப் பகுதியில் குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறி வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியப் பிரஜையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர அலுவலகம் தெரிவித்துள்ளது.

குடிவரவு சட்டத்தை மீறி புடவை விற்பனையில் ஈடுபட்ட சந்தர்ப்பத்திலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.




## "காவோலை"க்கு விருது

இயக்குநர் மிஸ்கின் நடுவராகக் கடமையாற்றிய பிரான்ஸின் நாவலர் குறும் படப் போட்டி 2015 இல் வேலணையூர் அருள் நிரோசின் இயக்கத்தில் உருவான 'காவோலை' குறும்படம் மூன்று விருதுகளை வென்றுள்ளது.

இவ் இயக்குநரால் முன்னர் கொழும்பு பல்கலைக் கழக தமிழ்ச்சங்கத்தால் நடத்தப்பட்ட குறும்படப் போட்டியில் 'சருகட்டை' குறும்படம் இரு விருதுகளைப பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நயினாதீவு நாகபூஷணி அம்மன் வருடாந்த மகோற்சவம்

வரலாற்றுப் புகழ்மிக்க நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன ஆலய வருடாந்தமகோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு முத்துச்சப்பறமும், 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை. கைலைக்காட்சியும் 25 வியாழக்கிழமை ஒன்பதாம் திருவிழா அன்று 108 சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளன.

30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 14 ஆம் திருவிழா அன்று தேர்த்திருவிழாவும் 1 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை தெப்போற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

யாத்திரிகர்களின் நலன்கருதி வழமைபோல் இம்முறையும் அமுதசுரபி அன்னதான சபையினர், தாகசாந்தி நிலையத்தினர், போக்குவரத்துச் சேவையினர், மோட்டார் படகுச் சேவையினர், சுகாதார சேவைப்பகுதியினர் தொண்டர் சபையினர், சாரணர்கள் போனறோர் வேண்டிய ஒழுங்குகளைச செய்துள்ளனர்.

# வன்முறையாளர்கள் பயன்படுத்தும் இடங்களை அகற்றுமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கு எதிராக வன்முறையாளர்கள் பயன்படுத்தும் இடங்களை அகற்ற யாழ்.அரச அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வயாவிளான் மத்திய கல்லூரிச் சமூகம் வேண்டுகோள் விடுத்து மகஜர் ஒன்றை கடந்த வெள்ளிக்கிழமை கையளித்துள்ளது.

இதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எமது பாடசாலையானது 2011 ஆம் ஆண்டளவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட சூழலில் தமது சொந்த இடத்தில் தற்போது இயங்கி வருகின்றது.

எமது பாடசாலை வடக்குப் பக்கமாக இராணுவக் குடியிருப்பும், தெற்காகப் புன்னாலைக் கட்டுவன் கிராமமும், மேற்குப் பக்கமாகக் குரும்பசிட்டியையும், வயாவிளானையும் தன்னகத்தே கொண்டது.

எமது மாணவர்கள் வயாவிளான், குரும்பசிட்டி, ஏழாலை, குப்பிளான், குட்டியப்புலம், சுதந்திரபுரம், கோணாவளை, ஊரெழு, புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய், ஈவினை, நீர்வேலி, கோண்டாவில் போன்ற பகுதிகளில் இருந்தும் 14 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக 3 பிரதேச செயலர் பிரிவுகளை மேலோட்டமாக உள்ளடக்கிக் கற்றல் செயற்பாட்டிற்காக வருகை தருகின்றனர்.

இப் பிரதேசங்களில் அநேகமானவை கடந்த 3 வருடங்களுக்குள் உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்து மக்கள் பாவனைக்காக விடப்பட்டவையாகும்.

அநேகமான பிள்ளைகள் மிகவும் வறிய சூழலில் இருந்து கற்றல் செயற்பாட்டிற்காக இங்கே வருகின்றனர். இவர்களுடைய பாடசாலை வருகையானது நடந்து வருதல், சைக்கிள் உறவினர் வாகனங்கள், பருவகாலச் சீட்டு, தனியார் பேருந்து ஆகிய வழிமுறைகளில் அமைகிறது.

இதில் சைக்கிள் மற்றும் நடந்து வருகின்ற பிள்ளைகள் மேல் அதிக கவனம் எடுக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது. ஏனெனில் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் அநேகமானவை ஆள் நடமாட்டம் குறைந்த பிரதேசம், கைவிடப்பட்ட வெற்றுப் பற்றைக் காடுகள், மக்கள் பாவனையற்ற பாழடைந்த வீடுகள், இராணுவக் காவலரண்களைக் கொண்டவையாகவும் காணப்படுகிறது.

இந்த அமைவிடங்கள் பெண்களுக்கெதிரான வன்முறையாளர்களுக்கு உகந்த இடமாக எம்மாலும், ஆங்காங்கு குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் நடைபெற்ற, நடைபெற்று வருகின்ற சம்பவங்களைக் கருத்தில் கொண்டும் எங்கள் பாடசாலைப் பகுதிகளிலும் அயல் பிரதேசங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாத வண்ணம் பெண்கள், மாணவியருக்குரிய காப்புரிமையைத் தங்களிடம் நாம் எதிர்பார்ப்பதாகவும் அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாசையூர் புனித அந்தோனியார் திருவிழா நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள யாத்திரை ஸ்தலங்களில் ஒன்றான பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த பெருவிழா நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நாளை 3 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு பாஷையூர் கடல் நடுவே எழுந்தருளியிருக்கும் புனித அந்தோனியார் கெவியில் வழிபாடுகள் இடம்பெற்று தொடர்ந்து 4 ஆம் திகதி தொடக்கம் நவநாள் வழிபாடுகள் மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி திருப்பலி இடம்பெறும். 12 ஆம் திகதி மாலை 4.45 மணிக்கு நற்கருணை விழா யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையிலும், 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 5.15 மணிக்கும் தொடர்ந்தும் அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலி பாஷையூர் மண்ணின் மைந்தனும் வத்திக்கான் திருப்பீடத்தினால் பாகிஸ்தான் நாட்டிற்கு ஆயராக நியமனம் பெற்ற விக்டர் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அன்றைய தினம் மாலை 4 மணிக்கு புனிதரின் தேர்ப்பவனி ஆலயத்தின் வெளிவளாக வீதியூடாக சென்று மீண்டும் ஆலயம் நோக்கி வந்தடைந்து புனிதரின் திருச்சொரூப ஆசிர்வழங்கல் நிகழ்வுடன் திருவிழா நிறைவடையும். (52)

# போஷாக்கு மாதம் அனுஷ்டிக்க ஏற்பாடு

நாட்டு மக்களின் போஷாக்கை மேம்படுத்தும் நோக்கில் ஆண்டுதோறும் பிரகடனப்படுத்தப்படும் போஷாக்கு மாதம் இம்முறையும் நடைமுறைப்படுத்த சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

"ஆரோக்கியத்தில் பலன் பெறுவோம் உழைப்பால் நாட்டை உயர்த்துவோம்" என்ற தொனிப் பொருளில் இம்முறை போஷாக்கு மாதம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இத்தொனிப்பொருளினூடாக இம்முறை உழைக்கும் வர்க்கத்தின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது. போஷாக்கை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றி மக்களை தெளிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய போஷாக்கு மாதத்தில் ஆரம்பிக்கப்படும் நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய மாகாண மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலதிக தகவல்களை அமைச்சின் போஷாக்கு தொடர்பு பிரிவின் தொலை பேசி இலக்கத்துடன் 011-2368320/23 தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என அமைச்சு தெரிவித்துள்ளது.

# திருமுறை மனனப் போட்டி வெற்றி பெற்றோர் விபரம்

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கிழகம் நடாத்தும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசையும், திருமுறைமனனப் போட்டி பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 5.15 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இரா.செல்வவடிவேல் தலைமையில் இடம்பெறும் பரிசளிப்பு விழாவுக்கு அகில இலங்கைத் திருமுறை மன்ற அமைப்பாளர் திருமுறைச்செல்வன் சி.கிருஷ்ணமூர்த்தி முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு திருமுறைமனனப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்குவார்.

திருமுறை மனனப்போட்டியில் முதல் 3 இடங்களைப் பெறுவோர்,

**பாலர் பிரிவு தரம் 01,**

பா.அக்ஷயா (ஏஞ்சல் சர்வதேச ஆங்கில பாடசாலை), சு.மானுஷா, அ.ருஷாளினி (யா/இந்து ஆரம்ப பாடசாலை),

**பாலர் பிரிவு தரம் 02,**

கி.சுரபி (யா/இந்து ஆரம்ப பாடசாலை), கு.யுகானா (யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்), உ.யாகினி (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை).

**கீழ்ப் பிரிவு தரம் 03, 04,**

சி.நிரோசினி (யா/இந்து ஆரம்ப பாடசாலை), ம.சாலினி (காரைநகர் கிழவன்காடு கலா மன்றம்), ச.வைஷ்ணவி (யா/இந்து ஆரம்ப பாடசாலை).

# போதைப் பொருள் விற்பனை கிளி.பொன்னகரில் அதிகரிப்பு

## தடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பகுதியின் கீழ் வரும் பொன்னகர் கிராமத்தில் போதைப்பொருள் விற்பனை அதிகரித்துள்ளதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் சட்டவிரோத சாராய விற்பனை அதிகளவில் இடம்பெற்று வருகிறது.

இந்த விற்பனை அதிகரித்துள்ளதால் போதைப் பழக்கத்துக்கு அடிமையாவோரின் எண்ணிக்கையும் கூடவே அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வீண் சண்டை சச்சரவுகள் ஏற்படுவதால் அமைதியற்ற சூழலை தாம் எதிர்கொள்வதாகவும் குறிப்பாக மணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பொலிஸாரின் கவனத்திற்கு பொது அமைப்பின் பிரதிநிதிகளால் கொண்டு வரப்பட்ட போதும் உரிய நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்பதையும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (77)

# சமூகசேவைகள் உத்தியோகத்தரின் கொலையை கண்டித்து அறிக்கை

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் மட்டக்களப்பு நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் சமூக சேவைகள் உத்தியோகத்தராகக் கடமையாற்றும் சச்சிதானந்தன் மதிதயான் கொலையை மிக வன்மையாகக் கண்டிக்கிறோம் என வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சமூக சேவை நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் வடக்கு கிழக்கு மாகாண சபை இயங்கிய போது எம்முடன் இணைந்து பலவேலைத்திட்டங்களில் ஈடுபட்ட துடிப்பான ஓர் இளைஞர். போர்க்காலத்திலும், போருக்குப் பிந்திய காலத்திலும் நிறைந்த சமூக சேவைகளை நலிவுற்ற மக்களுக்காக ஆற்றிய ஒருவர் அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்கெடுக்கிறோம் எனத் தெரிவித்துள்ளது.

# தொழில்நுட்ப, முகாமைத்துவ கல்லூரி யாழ். கிளை இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

அவுஸ்ரேலியன் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவக் கல்லூரியின் யாழ்.கிளை இன்று செவ்வாய்க்கிழமை இல. 403 மணிக்கூட்டுக் கோபுர வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வர்த்தக மற்றும் முகாமைத்துவ கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியல் ரி.வேல்நம்பி, சிறப்பு விருந்தினராக உயர் கல்வி அமைச்சின் தொழில்நுட்பவியல் பணிப்பாளர், பொறியியலாளர் சி.ஆர்.ரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளனர்.




அதி.வண.சுவாமி சித்ரூபானந்தாவின் முதலாவது குருபூசை தின விழாவை பிரான்ஸ் எஸ்.காசிலிங்கம் (அரியாலை) மங்களவிளக்கேற்றி ஆரம்பிப்பதையும், அருகில் விழாத்தலைவர் எஸ்.திருச்செல்வம் நிற்பதையும், நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசி வழங்குவதையும், சுவாமி சித்ரூபானந்தாவின் சேவைகள் பற்றி அதிபர் ஏ.சிவநாதன் உரையாற்றுவதையும், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்றத்தலைவர் லயன் வி.ஸ்ரீபிரகாஸ் நன்றியுரையாற்றுவதையும் காணலாம். (01)

சொற்ப மூளையும், பெரிய இதயமும் பெரும் காரியங்களை சம்பாதித்துவிடும்.

\- பெஞ்சமீன்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## "பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?"

"வடக்கு கிழக்கு இளைஞர்கள் பலரையும் அழித்து ஒழித்துவிட்டோம். ஆனால் அவர்கள் மீண்டும் எழமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? என்று அவர்கள் சிந்தித்தார்கள். அதற்காகவே போதைப் பொருள் பாவனையை வடக்கில் திட்டமிட்டு அறிமுகம் செய்தார்கள்" என்று மத்திய அரசை வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டி வடமாகாண அரசின் முதலமைச்சர் பேசியிருக்கிறார்.

இலங்கை அரசினது தமிழின அழிப்பின் அல்லது சிதைப்பின் ஒரு அங்கமாக இந்த போதைப் பொருள் பாவனையும் எமது இளைஞர்களிடம் திட்டமிட்டே பரப்பப்பட்டிருக்கிறது என்ற மிகப் பாரதூரமான குற்றச்சாட்டே முதலமைச்சரின் உரையில் வெளிப்பட்டிருக்கிறது.

வடமாகாண அரசின் முதலமைச்சர் என்றவகையில் தகவல்களைச் சரிவரத் திரட்டி அறிந்த ஆதாரங்களை வைத்துக்கொண்டுதான் அவர் இதைக் கூறுகிறார் என்றால், இந்த நாட்டு மத்திய அரசானது, தமிழ் மக்களை குறிப்பாக வடக்கு மக்களைச் சிதைத்தழித்துவிட முனையும் பயங்கர எதிரியாகத் தொடர்ந்து செயற்படுகிறது என்பதையே அவர் குறிக்கிறார்.

அப்படியாயின் தமிழ் மக்கள் மிக மிக அபாயகரமான ஒரு நிலைமைக்குள் இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்தச் சதிவலையிலிருந்து எமது மக்களை காப்பாற்றி மீட்டெடுப்பது குறித்து நாமெல்லோருமே அவசரமாக ஆராய்ந்து முடிவெடுக்கவும் செயற்படவும் வேண்டும்.

இந்த மாகாண மக்களின் மிக அதிகப்படியான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண அரசின் தலைவர் என்றவகையில், முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் இதற்கு என்ன தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ளவிருக்கிறார் என்பதையே தமிழ் மக்கள் இப்போது ஆவலாக எதிர்பார்ப்பார்கள்.

மேடையில் முழங்கிவிட்டுச் செல்வதால் இந்த சமூக அழிவைத் தடுத்து நிறுத்திவிட முடியாதென்பதை நாம் மட்டுமல்ல முதலமைச்சரும் அறிவார். வடக்கின் தலைமகன் என்றவகையில், இந்தப் பயங்கரத்திலிருந்து தப்ப நாம் என்ன செய்யப்போகிறோம் – இப்போது செய்யப்பட வேண்டியது என்ன என்ற வழிகாட்டும் பொறுப்பும் கடமையும் அவருக்கே உள்ளது.

வடக்கு கிழக்கு இளைஞர்கள் யுத்தத்தில் தோற்றிருந்தாலும் மீண்டும் எழமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? என்றே மத்திய அரசினர் பயப்படுவதாக முதலமைச்சர் குறிப்பிடுவதன் மூலம் அவர் சொல்ல வருவது என்ன?

அரசின் சதிவலையை முறியடிக்க நமது இளைஞர்கள் யுத்தத்திற்கு எழவேண்டியிருக்கும் என்று இதைக் கொள்ள வேண்டுமா? அப்படி அவர் அழிவுக்கு மீண்டும் தள்ளமாட்டார் என நம்புவோம். ஆதலால், சாத்வீக வழிகளில் நமது சமூக அழிவைத் தடுத்துக்கொள்வதற்கு முதலமைச்சர் என்ன செய்யவிருக்கிறார்?

வடக்கு முதலமைச்சரின் கட்சித் தலைவர் மத்திய அரசின் உயர் நிறைவேற்றுச் சபையில் இருப்பதால், அவர் மூலம் அங்கு இந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்து, மத்திய அரசின் வஞ்சகத் திட்டத்தை நிறுத்தி, தமிழ் இளைஞர்கள் காப்பாற்றப்படுவதற்கு ஏதும் முயற்சி எடுக்கிறாரா முதலமைச்சர்?

அது முடியவில்லை என்றால், தேசிய நிற்றவேற்றுச் சபையிலிருந்தும் உடன் வெளியேறி, அரசின் இந்த சதிமுயற்சிகளுக்கு எதிராக மக்களைத் திரட்டி அகிம்சைப் போராட்டத்தின் மூலம் இந்த அநீதியை உடன் தடுத்து நிறுத்துவதற்கு முயல்வதே வழி!

போதைப் பொருள் பாவனையைப் பரப்பி வடக்கு இளையோர் சமுதாயத்தை அழிக்கும் நடவடிக்கையை அரசினரே திட்டமிட்டுச் செய்கிறார்கள் என்றால், வடக்கு மக்களின் பிரதிநிதிகள் உடன் களத்தில் இறங்கிச் செயற்பட வேண்டுமல்லவா?

தலைவர்களாகப்பட்டவர்களின் வெற்றுத் திண்ணைப்பேச்சு எப்படி சமூகத்தைக் காப்பாற்றும்?

\- *ஆசிரியர்*

# போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு மரணதண்டனை வழங்குவது சரியா?

## ஆய்வு நடாத்தவுள்ளார் ஜனாதிபதி

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனை வழங்குவது தகுதியானதா என்பது தொடர்பில் ஆராயவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சர்வதேச புகையிலை எதிர்ப்பு தின தேசிய நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, சர்வதேச புகையிலை எதிர்ப்பு தின தேசிய நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த அவர்,

இந்த வர்த்தக சமூகத்தில் பணத்தை மாத்திரம் நேசிக்கின்ற மற்றும் மக்களின் உயிர்களை விட டொலர்களுக்கு மாத்திரம் மதிப்பளிக்கின்றவர்களுக்கு எதிராக அரசாங்கம் என்ற வகையில் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் தேவை உள்ளது.

மேலும் மூன்று வேளை உணவு இல்லாத போதிலும அணிவதற்கு ஒழுங்கான துணி இல்லாத போதிலும் மதுபானம் மற்றும் புகைத்தலுக்கு எவ்வித குறையும் இல்லை. இதற்கு உலக நாடுகள் வழங்கும் தண்டனைகள் தொடர்பில் கடந்த வாரத்தில் தேடிப் பார்த்தேன். நாட்டில் கருத்தாடல் ஒன்றை ஏற்படுத்த உத்தேசித்துள்ளேன்.

போதைப்பொருள் விற்பனை, கொண்டு வருதல் , விநியோகித்தலில் ஈடுபடுபவர்களுக்கு மரணதண்டனை வழங்குதல் சரியா என்பது தொடர்பில் கருத்தாடலை உத்தேசித்துள்ளேன்.

ஆனால் இதற்கு எதிராக பல்வேறு எதிர்ப்புகள் வரலாம். சர்வதேச மனித உரிமைகள் அமைப்பும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாம். அத்துடன் பிரச்சினைக்குத் தீர்வு மரண தண்டனை இல்லை என நாட்டிற்குள் இருப்பவர்கள் கூறலாம்.

ஆனால் உலகின் பல நாடுகளில் இந்தத் தண்டனை நடைமுறையில் உள்ளது. இது தொடர்பில் மக்களுக்கு கலந்துரையாட ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்துகின்றேன். போதைப் பொருள் விற்பனை செய்கின்ற, விநியோகிக்கின்றவர்களுக்கு எதிராக மரண தண்டனை வழங்குவது ஏற்புடையதா? என்பது தொடர்பில் மக்கள் கருத்துக் கணிப்பு தேவைப்படுகின்றது. சூழலை புரிந்து கொண்டு எதிர்வரும் நாட்களில் ஒரு தீர்மானம் எடுக்க முடியும் என்றார்.

# வாக்காளர்களாக இணையாதவர்கள் உடனடியாக இணையுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நேற்று வாக்காளர் தினம். ஆகையால் அதனை முன்னிட்டு, இன்னமும் வாக்காளர்களாக இணையாதவர்களை உடனடியாக வாக்காளர்களாக இணையுமாறு கோரி யாழ்.மாவட்ட தேர்தல் செயலகம் வாகனம் மூலம் ஒலி பெருக்கி ஊடாக அறிவித்து வருகின்றது.

இந்த அறிவிப்பு யாழ்.குடாநாடு முழுவதும் செய்யப்படுகிறது. இதுவரை வாக்காளர்களாக இணையாத 18 வயதுக்கு மேற்பட்ட சகலரும் உடனடியாக தத்தம் கிராம சேவகர் அலுவலகம் பிரதேச செயலகங்கள் போன்றவற்றுடன் தொடர்பு கொண்டு வாக்காளர்களாக இணைந்து கொள்ளுமாறு அந்த அறிவித்தலில் வலியுறுத்தப்படுகிறது.

இதனை அடுத்து வாக்காளர்களாக இணையாத பலர் கிராம சேவகர்களிடம் இதற்கான விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பித்து வருகின்றனர். எதிர்வரும் தேர்தலுக்கு முன்னர் அவர்கள் வாக்காளர்களாக இணைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போர்க்குற்றப் பயிலரங்கில் இலங்கையும் பங்கேற்பு

பிரான்சின் லியோன் நகரில் நேற்று ஆரம்பமாகிய, இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான ஐந்து நாள் அனைத்துலக பயிலரங்கில் இலங்கையும் பங்கேற்றுள்ளது.

இனப்படுகொலை, போர்க் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வது குறித்த இந்த நான்காவது அனைத்துலக பயிலரங்கை, இன்ரபோல் ஒழுங்கு செய்துள்ளது.

அனைத்துலக பொலிஸ் துறையின், போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகள் பணியகம் ஏற்பாடு செய்துள்ள இந்த பயிலரங்கில் 30 நாடுகள் கலந்து கொள்கின்றன.

இதில் இலங்கை சார்பில், முன்னாள் பொலிஸ் பேச்சாளரான சட்டவாளரும், மூத்த பொலிஸ் கண்காணிப்பாளருமான அஜித் ரோகன கலந்து கொள்கிறார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரிக்க ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் சன்ட்ரா பெய்டாஸ் தலைமையிலான நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த பயிலரங்கில் இலங்கை பங்கேற்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

ஐ.நா விசாரணைக்குழுவின் அறிக்கை வரும் செப்ரெம்பரில் வெளியிடப்படவுள்ளது.

அதேவேளை, நேற்று ஆரம்பமாகிய இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்த பயிலரங்கில், பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

மனித உரிமைகளுக்கான ஐரிஷ் நிலையம், அயர்லாந்து கல்வே தேசிய பல்கலைக்கழகம், ஜேர்மனியின் சமஷ்டி குற்றக்காவல் பணியகத்தின் மத்திய போர்க்குற்ற பிரிவு, அனைத்துலக குற்றவியல் பிரிவு, ருவாண்டாவின் தேசிய சட்டமா அதிபர் அதிகாரசபை, கனேடிய நீதித் திணைக் களத்தின் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்கள் பிரிவு, அனைத்துலக குற்றவியல் தீர்ப்பாய ஐ.நா பொறிமுறை, அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம், முன்னாள் யூகோஸ்லாவிய அனைத்துலக குற்றவியல் தீர்ப்பாயம், வோஷிங்டனில் உள்ள அனைத்துலக காவல்துறையின் வன்முறைக் குற்றங்கள் மற்றும் தீவிரவாத முறியடிப்புப் பிரிவின தேசிய மத்திய பிரிவு ஆகியவற்றின் மூத்த பிரதிநிதிகள் இந்த பயிலரங்கில் கலந்து கொள்கின்றனர். அனைத்துலக காவல்துறையான இன்ரபோல், ருவாண்டா மற்றும் யூகோஸ்லாவியாவில போர்க் குற்றங்கள், இனப்படுகொலைகள் குறித்த விசாரணைகளில் ஈடுபட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனைத்துலக தரத்துடன் போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து உள்ளக விசாரணைகள் நடத்தப்படும் என்று அறிவிததிருந்தார். இந்த விசாரணைகளுக்கு அனைத்துலக பொலிஸாரின் உதவி கோரப்படலாம் என்று தகவல்கள் தெரிவிப்பதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

# கஞ்சா கடத்த முயன்ற ஈழத்தமிழர்கள் கைது

(கொழும்பு)

இராமேஸ்வரம் அருகே இலங்கைக்கு கஞ்சாவை கடத்த முயன்ற ஈழத் தமிழர்கள் மூவரை கைது செய்துள்ள தமிழக பொலிஸார், அவர்களிடமிருந்து ஒரு கோடி ரூபா பெறுமதியான 10 கிலோ கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள மூவரும் தலைமன்னாரைச் சேர்ந்த அந்தோணி ரேகன், அசோக், மற்றும் சந்திரன் என தெரியவந்துள்ளது.

இராமேஸ்வரம் மண்டபம் தோணித்துறை கடற்கரையில், கடந்த சனிக்கிழமை நள்ளிரவு இராமநாதபுரம் கியூ பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி கென்னடி தலைமையில் பொலிஸார் திடீர் சுற்றிவளைப்பினை மேற்கொண்டனர்.


இந்தச் சந்தர்ப்பத்திலேயே தோணித்துறை கடற்கரையில் பதுங்கியிருந்த நிலையில் 3 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம் வந்த இவர்கள் மண்டபம் மற்றும் குடியாத்தம் அகதிகள் முகாமில் தங்கியிருந்ததோடு, இலங்கைக்கு போதைப்பொருள் கடத்த முயன்றமையும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களும் மண்டபம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# வெற்றி நாள் நினைவு கூரல்?

**என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து**



ஆட்சியில் இருந்த மகிந்த ராஜபக்ஷவை ஜனவரி 8இல் நடந்த தேர்தல்களில் தோற்கடித்த குறுகிய நாட்களில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்னாள் இராணுவத் தலைவரான சரத் பொன்சேகாவுக்கு அவரது பதவிகள் மற்றும் பட்டங்கள் யாவும் திரும்ப வழங்கப்பட்டன. இன்னும் ஒரு அடி முன்னே சென்று, முடிவடைந்த ஈழப் போர் நான்கில் அவர் வழங்கிய சேவையை கௌரவிப்பதற்காக இலங்கை இராணுவத்தில் முன்னர் இல்லாத பீல்ட் மார்ஷல் பதவியை அவருக்காக உருவாக்கினார். பொன்சேகா அதற்கும் மற்றும் அதற்கு மேலும் பதவிகளை பெறுவதற்கு தகுதியானவர்தான், ஆனால் ஒரு அரசியல் தலைமை என்கிற வகையில் அது போன்ற தனிப்பட்ட முடிவை, ஒரு சமப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு அங்கமாக குறிப்பாக பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்தினரிடம் காட்டப்பட்டதாகத் தெரியவில்லை.

அரசாங்க தலைவர்களான ஜனாதிபதி சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் வெளிப்படையாகவே குழப்பமும் அழிவும் நிறைந்த போர் வெற்றிகளின் நினைவுகளை தமிழ் சிறுபான்மையினரின் மனங்களில் இருந்து அழித்துவிட நினைக்கிறார்கள். தமிழர்கள் கிட்டத்தட்ட சுதந்திரமடைந்த காலம் முதல் இராணுவ முன்னணியின் ஒவ்வொரு வழிகளினாலும், எல்.ரீ.ரீ.ஈ மற்றும் எல்.ரீ.ரீ.ஈ அல்லாத ஏனைய குழுக்கள் கட்சிகள் ஆகிய அனைத்தினாலும் பெருமளவு பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார்கள். அரசியலுக்கு அப்பால், அரசியல் நல்லிணக்கம் மற்றும் அதிகாரப் பகிர்வு என்பன இன்று கூட தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை தீர்த்து வைப்பதற்கு நீண்ட வழி செல்லவேண்டி உள்ளது.

ஆனால் முன்னைய அரசாங்கத்தின் வெற்றி நாளை, நினைவு நாளாக மறு பிறப்பு கொடுத்த அதே சமயம் பீல்ட் மார்ஷல் பொன்சேகாவின் பதவி உயர்வுக்குப் பிறகு கொழும்பு வீதி ஒன்றுக்கு பெயர் மாற்றம் செய்தது தமிழர்களை கேலி செய்வதற்கு வழி வகுத்திருக்கும். அவரது பதவிகளையும் மற்றும் கௌரவங்களையும் மீள வழங்குவது அல்லது அவரை பீல்ட் மார்ஷலாக உருவாக்குவது என்பன வேறு. சில அவருக்கு தகுதியானவை, சில அரசியல் சார்ந்தவை, ஆனால் ஒரு வீதியின் பெயரை மாற்றுவது தேர்தல் சார்ந்த விடயம்.

## பொதுமக்கள் மரணங்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை

ஜனாதிபதி சிறிசேன ஒப்பீட்டளவிலான இன அமைதி மற்றும் நல்வாழ்வு எனும் காற்றை தொடர்ந்து வெளியே தள்ளுகிறார். அது உள்ளத்தை தொடுவதாகவும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க பிரதமராகவும் மற்றும் ஜனாதிபதியாகவும் தோற்றம் பெற்ற தேர்தல்களின் ஆரம்ப மாதங்களில் இடம்பெற்ற விடயங்களைப் போல உள்ளது, இரண்டுமே தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் விரைவான வெற்றியைப் பெற்றன. வெகுவிரைவிலேயே தான் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் யாவும் பாதிக்கப்பட்டவர்களாக தங்களை நிலை நிறுத்தி வரும் தமிழர்களின் கண்களுக்கு போதுமானவையாக தெரியவில்லை என்பதையும், நாட்டின் இனமோதலுக்கு யுத்தம் மற்றும் வன்முறை என்பனவற்றை தவிர வேறில்லை என்பதை சந்திரிகா கண்டுகொண்டார்.

மாத்தறையில் இடம்பெற்ற வெற்றி நாள் அணிவகுப்பில் புதிய ஜனாதிபதியிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கப்பட்ட தேசிய உரையில் சிறிசேன அத்தகைய நிகழ்வுகளில் அவரது முன்னோடியான ராஜபக்ஷவை போலவே அதிகம் நல்லிணக்கத்துக்கு சார்பான தொனியையே வெளிப்படுத்தினார். மாத்தறையில் வைத்து ஜனாதிபதி சிறிசேன தெளிவாக அடையாளப் படுத்தியது, அவர்கள் இங்கு கூடியிருப்பது சமீபத்தைய கடந்த காலத்தில் மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாட்களில் ஒன்றைக் கொண்டாடுவதற்காக என்பதை. நினைவுகூரல் என்பதன் அகராதி அர்த்தம் கொண்டாட்டம் என்பதையும் சேர்த்துக் கொள்கிறது. ஜனாதிபதி சிறிசேன இந்த நாள் யுத்த வெற்றி வீரர்களை நினைவுகூரும் நாள் என்று தெளிவாகச் சொன்னார். பொதுமக்கள் மரணங்களைப் பற்றி (தமிழர், சிங்களவர், அல்லது முஸ்லிம்கள்) எதுவும் குறிப்பிடவில்லை.

தனது முன்னோடிகளைப் போலவே ஜனாதிபதி சிறிசேனவும் (எல்.ரீ.ரீ.ஈ) பயங்கரவாதம் திரும்பவும் வருவதை அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்காது என அறைகூவல் விடுத்தார். வெற்றி நாள் பேச்சுக்கு ஒரு நாளைக்குப் பிறகு அவரது வலியுறுத்தல் எதிர்காலத்தை பற்றியதாக இருந்தது. யுத்தம் முடிவடைவதற்கு முன்பு ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் கூட எதிர்காலத்துக்கான நல்லிணக்கம் பற்றி பேசியும் மற்றும் செயற்பட்டும் வந்தன. அதேபோல கடந்த காலத்தை உரிய மதிப்பு மற்றும் மரியாதையுடன் புதைத்து விடவேண்டும் என்று எண்ணிய சில தமிழர்களும் இருக்கலாம்.

இருந்தும் மற்றொரு குழுவினர், குறிப்பாக தமிழ் புலம் பெயர்ந்தவர்கள் குழுக்கள் மற்றும் அவர்களின் அனுதாபிகளும் கூட உள்நாட்டிலும் மற்றும் தாங்கள் வாழ்ந்த நாடுகளிலும் அதற்குச் சவால் விடுத்தார்கள். உரத்த குரலில் சப்தமிடும் இந்த தீர்க்கமான புலம்பெயர்ந்தவர்களின் கரங்கள் ஒரு தனியான தமிழ் தேசத்துக்கு குறைவான எதையும் பெறுவதை தடுத்து நிறுத்தி விடும்.

விடுதலைப் புலிகளின் பிரகாசமான நாட்களில், எந்த ஒரு தமிழ்த்தலைவர் அல்லது குழுவினால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நல்லிணக்க நகர்வையும் நிராகரிப்பதுடன் அவருக்குத் துரோகி என்று பட்டம் சூட்டி அதைத்தொடர்ந்து உடனடி மரணதண்டனையும் நிறைவேற்றப்படும். யுத்தத்துக்கு பின்னான யுகத்தில் புதிய தலைமுறை பிரிவினைவாத தலைவர்(கள்), தமிழ் அரசியல் குழுக்களினால் மேற்கொள்ளப்படும் எந்த மற்றும் ஒவ்வொரு நல்லிணக்க நகர்வும் தங்கள் இறுதியான தமிழ்த் தேசத்தை அடைவதற்கான ஒரு படியாகவே இருக்கவேண்டும் எனப்பார்க்கிறார்கள். எந்தளவுக்கு வாய்ச் சவடால்கள் மேற்கொண்டாலும் இந்த உண்மையை அழிக்க அல்லது மறைக்க முடியாது. இவை எங்கே இட்டுச் செல்கின்றன?

## புத்திசாலி, ஆனால் நேர்மையற்றவர்

துரதிருஷ்ட வசமாக தமிழர் தரப்பில் இதுவரை ஒளித்துப் பிடித்து விளையாட்டுத்தான் தொடர்ந்து கொண்டிருக்கிறது. முன்னொரு சந்தர்ப்பத்தில் ரி.என்.ஏ யினை சேர்ந்த வட மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் மறைந்து போனவர்களின் ஞாபகார்த்தமாக அரசாங்க அலுவலக வளாகத்துக்குள் மரக்கன்று ஒன்றை நட்டார். இந்த முறை, இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் காட்சியை முதலீடு செய்து, தனது வட மாகாண சபை சகபாடிகள், கட்சித் தலைவர்கள் மற்றும் தமிழ் மக்கள் ஆகியோருடன் சேர்ந்து ஒரு நினைவுநாள் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டார்.

அவர்கள் இறந்த தமிழ் பொதுமக்களுக்காக அஞ்சலி செலுத்தினார்கள் மற்றும் அவர்கள் இறந்த எல்.ரீ.ரீ.ஈ தலைவர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்காகவும் அஞ்சலி செலுத்தினார்கள். உச்ச நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசரான முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஒரு நீதிமன்ற தடையுத்தரவையும் மீறி தாங்கள் நடத்திய ஞாபகார்த்த கூட்டத்தை நியாயப்படுத்திய போது, தடையுத்தரவானது ஊர்வலங்கள் நடத்துவதை தடை செய்ததே அன்றி அந்த வகையான பொதுக்கூட்டங்கள் நடத்துவதை தடுக்கவில்லை என வாதிட்டார். அது புத்திசாலித்தனமானது ஆனால் தமிழர்கள் வழக்கமாக பெரும்பான்மை சிங்களவரையும் மற்றும் இலங்கை அரசாங்கத்தையும் பழி சொல்வதைப்போல நேர்மையற்ற விளக்கம்.

விக்னேஸ்வரன் அந்த கருத்தை சொல்லாமல் இருக்கலாம் ஆனால் “எங்கள் போராட்டத்தின் முடிவு அல்ல ஆனால் அதன் ஆரம்பம்தான் இது” என்கிற முள்ளிவாய்க்கால் பற்றிய புலம் பெயர்ந்தவர்களின் சித்தரிப்பை அவரால் தவற விட்டிருக்க முடியாது. நாடுகடந்த தமிழ் ஈழ அரசின் பிரதம மந்திரியான விஸ்வநாதன் உருத்திரகுமாரன் தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் இலக்கான “ஒரு தனித் தமிழ்நாடு” என்பதைப் பற்றி அவர் அதிகம் பேசியுள்ளார். புலம் பெயர் குழுக்களில் பெரும்பாலானவர்கள் கூட இதே நம்பிக்கையை, இலட்சியத்தை மற்றும் கருத்தை பகிர்ந்து கொள்கிறார்கள்.

அவர்களின் வெளிப்படையான இலக்காக பொறுப்புக்கூறலை கொண்டுள்ள சர்வதேச சமூகம் (மேற்கு என வாசிக்கவும்) அதை பின்தொடரும் அதேவேளை நாட்டிற்கு உள்ளும் மற்றும் புறமும் உள்ள இலங்கை தமிழ் சமூகத்தினரில், அதிகரிகரித்து வரும் பிரிவினைவாத நோக்கத்தின் ஆழ, அகலங்களை விளங்கிக் கொள்வது அவசியம்.

## முறைகள் வித்தியாசமாக இருக்கலாம், நோக்கம் ஒன்று

அத்தகைய நோக்கங்களை அவர்கள் பல்வேறுபட்ட வழிகளிலும் வருடம் முழுவதும் வெளிக்காட்டும்போது, உலகத்தின் ஒரு பக்கமோ அல்லது மறுபக்கமோ இலங்கை அரசாங்கம் மற்றும் அதன் தலைவர்கள் சமூகங்கள் பற்றி சிந்திப்பதில் பல பின்விளைவுகளை ஏற்படுத்தும். இலங்கை தமிழர் சமூகத்தில் உள்ள மிதவாதிகள் மற்றும் நாட்டிலுள்ள அரசியல்வாதிகள் போன்றவர்களைக் கடும்போக்காளர்கள் தமது பிடிக்கு உட்படுத்துவது அதிகரிக்கும்.

காரணம், நியாயம், மற்றும் பின்னணி எதுவாக இருந்தாலும் எல்.ரீ.ரீ.ஈ யினரைப் போல அவர்களது நோக்கமும் ஒன்றாகவே உள்ளது. அவர்களது முறைகள் வித்தியாசமாக இருக்கலாம். எல்.ரீ.ரீ.ஈயின் இடத்திலும் மற்றும் அவர்களது பயங்கரவாத வழிகளிலும் அவர்கள் சர்வதேச சமூகத்திடம் எதிர்பார்த்ததை போலத் தோன்றியது, கிழக்குத் தீமோர், தென் சூடான் போல தங்கத் தட்டில் அது ஈழத்தை வைத்து நீட்டும் என்று.

இலங்கை தமிழ் புலம்பெயர்ந்தவர்களை விட தாங்கள் புத்திசாலிகள் என உலகம் நினைக்கிறது. ஆனால் சர்வதேச சமூகத்தை விட ஆழத்திலும் தந்திரத்திலும் அவர்கள் வல்லவர்கள் என்கிற உண்மையை வெட்கமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும். விரைவிலேயே எல்.ரீ.ரீ.ஈயின் அதே நோக்கமே மற்றவர்களிடமும் இருந்தது என்பதை சர்வதேச சமூகம் கண்டு பிடித்துவிடும்.

## தமிழ் அரசியல் தலைமைக்கு நல்லிணக்க ஈடுபாடு தேவை

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்துக்கு கிட்டியதான சமயத்தில் வட மாகாணத்தில் 19 வயது தமிழ் பெண் கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்களை வீதிக்கு கொண்டு வந்தது.

அரச முகவர்கள் சங்கடத்துக்கு உள்ளானதினால் ஒன்றில் ரி.என்.ஏ அல்லது தற்போதுள்ள அரசாங்கம் அவர்கள்மீது குற்றம் சொல்லவில்லை. தசாப்தங்களுக்கு முன்பு தமிழ் போர்க்குணம் முதலில் எப்படி ஆரம்பமானது என்பதை அவர்கள் அறிந்திருப்பதுடன் இன்னமும் நினைவில் கொள்ள வேண்டும். அது மிகவும் கொடுமையான குற்றம், இனத்தை மையப்படுத்திய சிங்கள பொதுமக்கள் அல்லது ஆயுதப் படையினர் ஆகியோர்ரின் தொடர்புகள் அந்த சம்பவத்தில் இருந்ததாக அறிக்கைகள் எதுவுமில்லை.

இலங்கையை மையப்படுத்தி விரைவான நல்லிணக்க முயற்சிகளுக்கான அவசர தேவையை மற்றும் இந்த நடவடிக்கைக்கான தமிழ் அரசியல் தலைமையின் பாரிய ஈடுபாட்டினையும் கூட அது அடிக்கோடிட்டு காட்டுகிறது, அது எந்த விடயத்திலும் உத்தரவாதம் வழங்குவதையோ மற்றும் அது வைத்திருப்பதையோ - அல்லது அதனால் வைக்கப்பட்டிருப்பதையோ காண முடியாமல் உள்ளது.

# அரசியலில் ஈடுபடுவதற்கு படையினருக்குத்தடை



எதிர்காலத்தில் பாதுகாப்புப் படையினருக்கு அரசியலில ஈடுபட தடை விதிக்கப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலனறுவை மெதிரிகிரியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், எதிர்வரும் காலங்களில் முப்படை, பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையின ருக்கு அரசியல் செய்ய தடைசெய்யப்பட்டுள்ளது. சட்டத்தை செயற்படுத்தி அதனைப் பாதுகாக்கும் பொறுப்பு மாத்திரமே அவர்களுக்கு உள்ளது.

எமது நாட்டு இராணுவம் ஒழுக்க சீலரான இராணுவம் என்பதை முழு உலகமும் ஏற்றுக் கொண்டுள்ளது. இனிவரும் காலங்களில் சகல பாட சாலைகளிலும் மாணவர் படையணிகள் ஆரம் பிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# பொதுத்’தேர்தலின் பின்னரும் நாட்டின் பிரதமராக ரணில் நம்பிக்கையுடன் சஜித்



எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னரும் ரணில் விக்கிரமசிங்கவே நாட்டின் பிரதமர் என சமுர்த்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலின் பின்னரும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகிப்பதனை எவராலும் தடுக்க முடியாது.

திறைசேரியை சூறையாடி சாப்பிடுவதனைத் தவிர்த்து, அதன் நன்மைகள் பலன்கள் வரப்பிரசாதங்கள் சாதாரண மக்களைச் சென்றடையும் யுகமொன்று உருவாகியுள்ளது.

இதனால் யார் பிரதமர் பதவிக்காக பிச்சைப் பாத்திரம் ஏந்தி அலைந்து திரிந்தாலும், பிரதமராக ரணிலே நியமிக்கப்படுவார்.

யார் ஜனாதிபதி, யாரை பிரதமராக்க வேண்டும் என்பதனை மக்கள் ஏற்கனவே தீர்மானித்துள்ளனர்.

கடந்த காலங்களில் அபகீர்த்தியான, மோசடிகளில் ஈடுபட்டவர்கள் அரசியல் கட்சிகளை ஆக்கிரமித்துக் கொள்ள எவரும் இடமளிக்கக் கூடாது.

மக்களுக்குச் சேவையாற்றி வளங்களை சரியான முறையில் பங்கீடு செய்து மெய்யான நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டியது எமது பொறுப்பாகும் என சஜித் பிரேமதாச சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றைக் கலைக்க 20 குறித்து கவலைப்படக்கூடாது

## என்கிறார் விஜித ஹேரத்



தேர்தல் மறுசீரமைப்பை உள்ளடக்கிய 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினாலும் நிறைவேறாவிட்டாலும் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்து தேர்தல் நடத்தப்பட வேண்டும் என ஜே.வி.பி மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

மக்கள் வழங்கிய ஆணைக்கு மதிப்பளித்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தலின் மூலம புதிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும். எனினும், காலத்தை மேலும் இழுத்தடித்து தற்பொழுதுள்ள நாடாளுமன்றத்தை வைத்து தொடர்ந்தும் அரசு நடத்துவதற்கே பிரதான கட்சிகள் முயற்சிப்பதாக ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் குற்றஞ்சாட்டினார்.

பிரதமருக்கோ, எதிர்க்கட்சித் தலைவருக்கோ தொடர்ந்தும் நாடாளுமன்றத்தில் அந்தந்தப் பொறுப்புக்களை வகிப்பதற்கு தகுதி இல்லை. 20ஆவது திருத்தச்சட்டமூலத்தைக் கொண்டுவருவது தொடர்பில் அரசாங்கத்துக்குள் இன்னமும் இணக்கப்பாடு இல்லை.

இதற்கு இன்னமும் அமைச்சரவையின் அனுமதி வழங்கப்படவில்லை. எனவே நாளை புதன்கிழமைக்கு முன்னர் இதனை நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவர முடியாது. இவற்றை வைத்துப் பார்க்கும்போது நாடாளுமன்றத்தைக் கலைக்காது மேலும் காலத்தை இழுத்தடிக்கும் உத்தி கையாளப்படுவதாகவே உணர முடிகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்பட்டு தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதாகவும், தேர்தலை முகங்கொடுப்பதற்கு ஏதுவாக ஆரம்பகட்டப் பணிகளைத் தமது கட்சி ஏற்கனவே ஆரம்பித்திருப்பதாகவும் விஜித ஹேரத் தெரிவித்தார்.

# மக்களால் வழங்கப்பட்ட பதவியை எந்தக் கட்சியாலும் மாற்ற முடியாது

## உறுதியாகக் கூறுகிறார் ரணில்

(கொழும்பு)



கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி மக்கள் வழங்கிய ஆணையை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியாலோ, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பாலோ மாற்ற முடியாதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினரும் என்னை மாற்ற வேண்டும் என கூறுகின்றனர் பிரதமரை அப்படி மாற்ற வேண்டுமெனறால் ஒரேவழி தேர்தலுக்கு சென்று மக்கள் ஆணையை பெற்றுக் கொள்வதாகும். நாம் ஜனவரி 8ஆம் திகதி மக்கள் வழங்கிய ஆணையின்படியே இருக்கின் றோம்.

இந்த ஆணையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாலோ , ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பாலோ மாற்ற முடியாது. வேண்டுமென்றால் தேர்தலுக்கு வாருங்கள். அதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பதுக்கிய சொத்துக்களை ஆராய 3 நாடுகளின் நிபுணர்கள் விஜயம்

(கொழும்பு)

கடந்த அரசாங்கத் தலைவர்கள் வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள சொத்துக்கள் தொடர்பில் ஆராய்வதற்கு மூன்று நாடுகளின் நிபுணர் குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளன.

இந்தக் குழுக்கள் ஏற்கனவே பதுக்கி வைக்கப்பட்டுள்ள சொத்துக் கள் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன் நிதிக் குற்றவியல் பிரிவு மற்றும் குற்ற விசாரணைப் பிரிவு ஆகியவற்றின் அதிகாரிகளை சந்தித்து தேவையான தகவல்களை திரட்டியுள்ளனர்.

நிதிக் குற்றச் செயல்கள் தொடர்பிலான தகவல்கள் மற்றும் சாட்சி யங்களைப் பெற்றுக்கொள்ளத் தேவையான தொழில்நுட்ப வழி முறைகள் மற்றும் ஏனைய வசதிகளை இலங்கை அதிகாரிகளுக்கு வழங்க இந்த நிபுணர்கள் இணங்கியுள்ளனர்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க ராஜாங்கச் செயலாளரிடம் இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, நிபுணர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில், அமெரிக்காவிற்கான இலங்கை ராஜதந்திரியொருவர் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான தகவல்களை அமெரிக்கா இலங்கைக்கு வழங்கவுள்ளது.

இந்த ராஜதந்திரி தொழில்சார் பணிகளை தவிர முகவர் பணிகளில் ஈடுபட்டு தரகுப் பணத்தை சம்பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நபர் லோஸ் ஏஞ்சல்ஸ், ஆர்லிங்டன், வெர்ஜினியா மற்றும் வொஸிங்டன் ஆகிய பகுதிகளில் வீடுகளை கொள்வனவு செய்துள்ளார்.

அமெரிக்காவில் இலங்கையின் நன்மதிப்பை மேம்படுத்த அதிகளவு பணம் செலவிடப்பட்டுள்ளதாகவும் இது குறித்தும் விசாரணை நடத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா, இந்தியா மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் விசேட நிபுணர் குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதுடன் கடந்த அரசாங்கத் தலைவர்களின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

# இலங்கையர்களின் வெளிநாட்டுப்பணம் கூடுதல் வட்டி வழங்க நடவடிக்கை



இலங்கையர்களின் வெளிநாட்டுப் பணத்திற்கு கூடுதல் வட்டி வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

வெளிநாட்டு வங்கிகளில் வைப்புச் செய்துள்ள இலங்கையர்கள், அந்தப் பணத்தை கொண்டு வந்து இங்கு வைப்புச் செய்தால், கூடுதல் வட்டி வழங்கத் தயார் என அறிவித்துள்ள அரசு,அதிகளவான பாதுகாப்பையும் வழங்கத் தயார் எனவும் தெரிவித்துள்ளது.

கூடுதலான வட்டியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சில இலங்கையர்கள் வெளிநாட்டு வங்கிகளில் வைப்புச் செய்துள்ளனர்.

பத்து பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பணம் இவ்வாறு வெளிநாட்டு வங்கிகளில் இலங்கையர்களால் வைபபுச் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தை மீளவும் நாட் டுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி அமைச் சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி, டொலரின் பெறுமதி அதிகரிப்பு ஆகிய சாதகத்தன்மைகளைப்பயன்படுத்திக் கொள்ள வெளிநாட்டு வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத்தை நாட்டுக்கு கொண்டு வருமாறு வைப்பாளர்களிடம் கோருகின்றோம்.

வெளிநாட்டு நிதியை பெற்றுக் கொள்வதற்காக இலங்கையர் அல்லாத தரப்பினருக்கு பாரியளவில் பணத்தைச்செலுத்துவதற்கு பதிலாக அந்தப் பணத்தை இலங்கையர்களுக்கு செலுத்த விரும்புகின்றோம்.

முதலீட்டாளர்கள் தங்களுக்கு கிடைக்கும் வெளிநாட்டுப்பணத்தை நாட்டுக்குள் கொண்டுவர விரும்பாமை அவ்வளவு சாதகமான நிலைமையல்ல என அமைச்சர் ரவி கருணாநாயக்க ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

# இரண்டு சடலங்கள் மாத்தறையில் மீட்பு

மாத்தறை மஹாநாம பாலத்தில் இருந்து நில்வள ஆற்றில் குதித்து தமது உயிரை மாய்த்துக் கொண்ட இருவரது சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர்களில் ஒருவர் மாத்தறை பிரதேசத்தில் பிரசித்தமான பாடசாலை ஒன்றின் ஆசிரியர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் வல்கம பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதானவர் என தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, நில்வள ஆற்றில் குதித்த மற்றுமொருவர் மாத்தறை - மிரிஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மாலை நேரக் கல்வி முட்கொம்பனில் ஆரம்பம்



(முட்கொம்பன்)

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் 2014 ஆம் ஆண்டு விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் முட்கொம்பனில் நிர்மாணிக்கப்பட்ட சந்திரோதயா மாலை நேரக் கல்வி நிலையம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களில் மாலை நேரக்கல்வியைப் பெறுவதில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களுக்கு தீர்வு காணும் வகையில் மாவட்ட கல்வி அபிவிருத்திக்குழுவின் அனுசரணையுடன் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் 2014ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 11 மாலைநேரக்கல்வி நிலையங்களை நிறுவுவதற்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டார்.

அதனடிப்படையில் முட்கொம்பன் பகுதி மக்களின் கோரிக்கைக்கமைவாகவும் அப்பகுதி மாணவர்களின் கல்வி மேம்பாட்டினை இலக்காகக் கொண்டும் அப்பகுதியில் கல்வி நிலையம் ஒன்றினை நிறுவுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் சுமார் மூன்றரை இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்திருந்தார் அந்நிதி மூலம் அப்பகுதி மக்களால் அமைகககப்பெற்ற சந்திரோதயா கல்வி நிலையம் நேற்றுமுன்தினம நாடாளுமன்ற உறுப்பினரால் திறந்து வைககப்பட்டு மாணவர்களுக்கான அனுமதிகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் பூநகரி பிரதேச சபை உறுப்பினர் குகேந்திரன் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மாணவர்கள் பெற்றோர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# கடலுணவுகளின் விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடலுணவுகளின் விலைகள் தற்போது அதிகரித்துள்ளன. கடந்த சில வாரங்களாக கடலுணவுகள் அதிகளவில் சந்தைக்கு வந்ததால் அவற்றின் விலைகள் குறைந்து காணப்பட்டன. ஆனால் தற்போது விலைகளில் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இதன்படி ஒரு கிலோ சுறா 800 ரூபா,ஒரு கிலோ இறால் 700 ரூபா, கணவாய் 600 ரூபா, ஒரு கிலோ மீன்-400 ரூபா, ஒரு கிலோ நண்டு 350 ரூபா ஆகிய விலைகளில் குடாநாட்டில் கடலுணவுகள் விற்பனையாகின்றன.

யாழ்.நகரை அண்டிய சின்னக்கடை, கொட்டடி, பாஷையூர், நாவாந்துறை ஆகிய மீன் சந்தைகளில் தற்போது மீன்களின் வரத்துக் குறைந்து காணப்படுவதால் கடலுணவுகளின் விலைகளில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முகாமைத்துவ ஆய்வரங்கு பல்கலை விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

அறிவைப் பகிர்வதன் ஊடாக படைப்பாற்றலை ஏற்படுத்தல் எனும் தொனிப்பொருளிலான சமகால முகாமைத்துவ ஆய்வரங்கு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி ஆய்வரங்கிற்கு ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஆய்வரங்குக்கான குழு அறிவித்துள்ளது.

இந்த ஆய்வரங்குக்கு கணக்கீடும் நிதியும், வங்கியியலும் காப்புறுதியும், வணிகப் பொருளியல் வணிகமும் சட்டச் சூழலும் முயற்சியாண்மையும், செயாதபாட்டு முகாமைத்துவமும் சூழல் முகாமைத்துவமும், சமூகப் பாதுகாப்பு தகவல் தொழில்நுட்பமும், தொடர்பாடலும் சர்வதேச வியாபாரமும், நிதியும் அறிமுகாமைத்துவமும், சந்தைப்படுத்தலும், விநியோகச்சங்கிலி முகாமைத்துவமும், செயற்பாட்டு ஆய்வு நிறுவன நடத்தையும் மனிதவளமுகாமைத்துவமும் தந்திரோபாய முகாமைத்துவமும சுற்றுலாத்துறை விருந்தோம்பல் மற்றும் நிகழ்வுமுகாமை ஆகிய தலைப்புக்களில் கட்டுரைகளை சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் ஆய்வுச் சுருக்கமும் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஆய்வுச் சுருக்கம் ஏற் பறிவிப்பும் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஆய்வுக்கட்டுரை கையளிப்பும் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் ஆய்வுக்கட்டுரை ஏற்பறிவிப்பும் 21 ஆம் திகதி ஆய்வரங்குப்பதிவும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி ஆய்வரங்கும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# கலாசார பேரவையின் செயற்குழுக் கூட்டம்

யாழ்.பிரதேச செயலகத்தின் கலாசாரபேரவையின் செயற்குழு கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவி திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் 2015 இற்கான கலாசார விழா, யாழ்.பாடி கலாசார மலர் பாகம் 02, யாழ்ரத்னா விருது வழங்கல் சம்பந்தமாக ஆராயப்பட்டது. அத்துடன் நாடகக்கலையை ஊக்குவித்தல் விடயமாகவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டன. யாழ்.பாடி கலாசார மலருக்கான ஆக்கங்களை பெற்றுக் கொள்வதில் அங்கத்தவர்கள் கூடிய கவனம் எடுத்தல் அவசியமெனவும். ஆக்கங்களில் வரலாறுகளும் செயற்பாடுகளும் உண்மைத் தன்மை பெற்றிருத்தல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டன. வரலாற்றுச் சான்றுகளுடன் நெறிப்படுத்தப்பட்ட ஆக்கங்கள் வரவேற்கப்படவுள்ளன. இது சம்பந்தமான விபரங்களுக்கு யாழ்.பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரை அணுகலாம் 2015 ஆம் ஆண்டுக்கான கலாசார விழா எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ளது.(105)

# கதீஜா மகளிர் கல்லூரி ஆரம்ப நிகழ்வு

25 வருடங்களுக்கு பின்னர் யாழ்.ஒஸ்மானியாவின் புதிய கட்டடத்தில் கதீஜா மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் அதிபராக செல்வி ஏ.ஸி.ஜான்ஸி கல்வியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். இக் கல்லூரியில் 86 மாணவிகளும், 07 ஆசிரியைகளும் மேலும் ஒரு தொண்டர் ஆசிரியையும் சேவையாற்றுகின்றனர். இதுவரை காலமும் ஒஸ்மானியாக் கல்லூரியில் ஆண், பெண் இருபாலாரும் கல்வியை மேற்கொண்டனர்.

ஆனால் இஸ்லாமிய கலாசார விழுமியங்களுக்கு ஏற்றாற் போல முஸ்லிம் பெரியார்களின் விருப்புக்கிணங்க கல்வியலாளர்களின் தூரநோக்கோடு இரண்டாம் தவணையிலிருந்து பெண்களுக்காக புதிய கட்டடத்தில் கதீஜா பெண்கள் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப் புதிய கல்லூரிக்கு வளப பற்றாக்குறை அதிகமாகவுள்ளதாக வடமாகாண சபையின் கல்வியமைச்சுக்கு தற்போதைய தேவைகள் பற்றி அறிக்கை வழங்கப் பட்டுள்ளதாக அதிபர் கூறினார். அரச உதவிக்கு மேலதிகமாக முஸ்லிம் தனவந்தர்களின் உதவிகள் அவசியமெனவும் அதிபர் தெரிவித்துள்ளார். (105)

# மூதாட்டியின் சடலம் மீட்பு

சாவகச்சேரி பகுதியில் மூதாட்டி ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி புகையிரத நிலைய வீதியில் தனித்து வசித்து வரும் செல்வி நாகேஸ்வரி மகாதேவா (வயது 78) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது வீட்டில் ஆள்நடமாட்டம் இல்லாததால் அயலவர்கள் தொலைபேசி மூலம் அழைப்பை ஏற்படுத்தியபோது மறுமுனையில் தொலைபேசி ஒலித்ததே தவிர எவரும் பதிலளிக்கவில்லை.

இதனால் சந்தேகமடைந்த அயலவர்கள் கிராம அலுவலருக்குத் தகவல் தெரிவித்தனர். இதையடுத்து அயலவர்களுடன் அவர் வீட்டுக்குள் சென்று பார்த்தபோது மூதாட்டி காயங்களுடன் இறந்த நிலையில் காணப்பட்டுள்ளார். இதையடுத்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் அங்கு வந்து சடலத்தை மீட்டனர். அவரது காதில் இருந்த தோடு கழற்றப்பட்டிருந்ததுடன் வீடு முழுவதும் தேடுதல் நடத்தப்பட்ட தடயங்கள் காணப்பட்டது என அயலவர்கள் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு சாவ கச்சேரி நீதவான் வருகை தந்து தடயங்களை பார்வையிட்டார். மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவதற்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# "வாழ்வின் எழுச்சி" திட்டத்தின் சிரமதானப் பணிகள்

ஸ்கந்தபுரம் வாழ்வின் எழுச்சி சமுதாய் அடிப்படை வங்கியின் வலயத்திற்குட்பட்ட கண்ணகை புரம் (KN-3) கிராமத்தின் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தரினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மாதாந்த சிரமதானப் பணியின் மூலம் கிராமத்தின் பொதுக் கட்டடங்கள் அமைந்துள்ள அனைத்து வளாகங்களும் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

வாழ்வின் எழுச்சிப் பயனாளிகளால் கண்ணகை புரம் கிழக்கில் அமைந்துள்ள சமுர்த்தி வங்கி வளாகம் மற்றும் கண்ணகைபுரம் மத்தியில் அமைந்துள்ள முன்பள்ளி கிளி.கண்ணகைபுரம் அ.த.க.பாடசாலை, கிராம அலுவலர் அலுவலகம் என்பனவும் கண்ணகை புரம் குடியிருப்பு பகுதியில் உள்ள புதிய பொது நோக்கு மண்டப வளாகம் என்பன சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை கண்ணகை புரம் மேற்கில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபையின் வளாகமும் வாழ்வின் எழுச்சி பயனாளிகளால் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.(69)

# முரசின் இன்றைய பலன்

(02.06.2015 செவ்வாய்க்கிழமை)

மன்மத வருஷம் வைகாசி மாதம் 19 ஆம் திகதி.
பூரணை / சித்தயோகம்.
அனுச நட்சத்திரம் முன்னிரவு 08.18 வரை. பின் கேட்டை.
இராகுகாலம் 02.52-04.22 வரை சுபநேரம் 10.22-11.52 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
தொழில் மற்றும் வியாபாரத்தில் நிலவிய ஆமைவேக நிலை விலகுதல்.

**ரிஷபம்**
கண்டதே காட்சி கொண்டதே கோலமென்று திரிந்ததால் தேக சௌக்கியம் பாதிப்படைதல்.

**மிதுனம்**
இயந்திரக் கோளாறினால் உரிய நேரத்திற்கு சமுகமளிக்காது போய்விடல்.

**கடகம்**
நீண்ட நாள் இழுபட்ட நிலுவை முறைப்பாட்டினால் சாதக நிலைக்குவருதல்.

**சிம்மம்**
பழுதடைந்த உணவுப் பண்டத்தினால்தேகநிலை பாதிக்கப்படல்.

**கன்னி**
கௌரவச் செயற்பாட்டினால் அழைப்பினை மறுத்துவிடல்.

**துலாம்**
விலங்கு குறுக்கறுத்தவேளை தெய்வ செயலாக விபத்து ஏற்படாது விடல்.

**விருச்சிகம்**
திகதி தப்பிய பொருட்களை கட்டி யழக்க முயன்றவருடன் ரகளை ஏற்படல்.


**தனுசு**
பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வங்கிக் கடனுக்கு விண்ணப்பிக்க எண்ணமிடல்.

**மகரம்**
ஓய்வுக்குப் பின்னரும் மீள் நியமனம் பெற முயற்சித்தல்.

**கும்பம்**
போலியான நகையை வைத்து பணம்பெற நாடுபவர் பற்றி கவனமெடுத்தல்.

**மீனம்**
அநாவசியமாக பிறர் காரியங்களில்தலையிடுவதைக் கைவிடடால் விமோசனம் உண்டாகும்.

# ஜப்பான் வீரர் நிஷிகோரி
## காலிறுதிக்கு முன்னேறி சாதனை



(பரிஸ்)

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் காலிறுதி ஆட்டத்திற்கு முன்னேறி ஜப்பான் வீரர் நிஷிகோரி சாதனை படைத்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் 4ஆவது சுற்றில் 5ஆம் நிலை வீரர் ஜப்பானின் நிஷிகோரி, ரஷ்யாவின் கபாஷ்விலியுடன் களம் கண்டார்.

இதில் ஆரம்பம் முதலே பிரமாதமான ஆட்டத்தை வெளிப்படுத்திய நிஷிகோரி 6-3, 6-4, 6-2 என்ற நேர் செட்டில் கபாஷ்விலியை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றார். ஆட்டம் 1 மணி 58 நிமிடங்கள் நடந்தது.

1931 மற்றும் 1933ஆம் ஆண்டு ஜப்பானின் ஜிரோ சாடோ அரையிறுதி வரை முன்னேறியிருந்தார். அதன் பிறகு பிரெஞ் ஓப்பனில் ஜப்பான் வீரர் ஒருவர் காலிறுதிக்குள் நுழைவது இதுவே முதல் முறையாகும். நிஷிகோரி, இந்த தொடரில் இதுவரை ஒரு செட்டை கூட இழக்கவில்லை என்பது கவனிக்கத்தக்க அம்சமாகும்.

# சிகரம் தொட்ட செரீனா



(பரிஸ்)

பிரெஞ் ஒப்பன் ரென்னிஸ் தொடிரில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 50ஆவது வெற்றியைப் பதிவு செய்துள்ளார். பிரெஞ் ஓப்பன் ரென்னிஸில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற 3ஆவது சுற்றில் முதல்நிலை வீராங்கனை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், முன்னாள் முதல்நிலை வீராங்கனை பெலாரசின் விக்டோரியா அஸரென்காவை வீழ்த்தியதன் மூலம் இச்சிறப்பை பெற்றுக் கொண்டார். 14ஆவது ஆண்டாக பிரெஞ் ஒப்பனில் பங்கேற்றுள்ள செரீனா அதில் பதிவு செய்த 50ஆவது வெற்றி இதுவாகும்.

ஏற்கனவே அவுஸ்ரேலிய ஓப்பனில் 68 வெற்றிகளையும், விம்பிள்டனில் 72 வெற்றிகளையும், அமெரிக்க ஓப்பனில் 79 வெற்றிகளையும் செரீனா ருசித்துள்ளார். இதன் மூலம் "ஓப்பன் எரா" வரலாற்றில் (அமெச்சூர் வீர, வீராங்கனைகளுடன், தொழில்முறை வீரர்களும் அனுமதிக்கப்பட்ட 1968ஆம் ஆண்டில் இருந்து) 4 வகையான கிராண்ட்ஸ்லாம் போட்டியிலும் 50 இற்கு மேல் வெற்றிகளை குவித்த முதல் வீராங்கனை என்ற சாதனையை படைத்தார்.

ஸ்டெபி கிராப், மார்ட்டினா நவரத்திலோவா, கிறிஸ் எவர்ட் போன்ற ஜாம்பவான்கள் கூட இச்சாதனையை (இவர்கள் மூன்று கிராண்ட்ஸ்லாமில் மட்டுமே 50 இற்கு மேல் வெற்றி) செய்யவில்லை . என்பது குறிப்பிடத்தக்கது.

# கனிஷ்ட உலக கிண்ண கால்பந்து; போர்த்துக்கல், உருகுவே வெற்றி



(ஒக்லாந்து)


கனிஷ்ட உலக கோப்பை கால்பந்துப்போட்டியில் போர்த்துக்கல், உருகுவே அணிகள் வெற்றி பெற்றன.

20ஆவது கனிஷ்ட உலக கோப்பை கால்பந்துப் போட்டி (20 வயதுக்குட்பட்டோர்) நியூசிலாந்தில் நடைபெற்று வருகிறது.

இதில் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று முன்தினம் நான்கு லீக் ஆட்டங்கள் நடைபெற்றன. "சி" பிரிவில் இடம் பெற்றுள்ள போர்த்துக்கல் அணி, செனகலுடன் மோதியது. 26ஆவது வினாடியிலேயே போர்த்துக்கலின் ஜெல்சன் மார்ட்டின்ஸ் கோல் போட்டு மிரட்டினார். இது கனிஷ்ட உலக கோப்பையில் 4ஆவது அதிவேக கோலாகும். அதன் பின் கடைசிக் கட்டத்தில் ஆந்த்ரே சில்வா, நுனோ சான்டோஸ் ஆகிய போர்த்துக்கல் வீரர்களும் கோல் போட்டனர். செனகல் அணியால் பதில் கோல் போடமுடியவில்லை. முடிவில் போர்த்துக்கல் அணி 3-0 என்ற கோல் கணக்கில் செனகலை சாய்த்தது. இதே பிரிவில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் கொலம்பியா 1-0 என்ற கோல் கணக்கில் கட்டாரை வென்றது. கொலம்பியா அணியின் வெற்றிக்குரிய கோலை ரோட்ரிகஸ் 24ஆவது நிமிடத்தில் அடித்தார்.

"டி" பிரிவில் நடைபெற்ற ஒரு ஆட்டத்தில் மாலி-மெக்சிக்கோ அணிகள் சந்தித்தன. முதல் பாதியில் கோல் ஏதும் விழாத நிலையில் பிற்பாதியில் விதிகளை மீறி ஒழுங்கீனமாக நடந்து கொண்ட மாலி வீரர் ஒருவரும், மெக்சிக்கோ வீரர்கள் இருவரும் வெளியேற்றப்பட்டனர். இதனை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட மாலி அடுத்தடுத்து 2 கோல்களைப் போட்டு அசத்தியது. 77ஆவது நிமிடத்தில் "பிரிகிக்" வாய்ப்பில் ஆடமா டிராரே தலையால் முட்டி கோல் வலைக்குள் பந்தை திணித்தார். 79ஆவது நிமிடத்தில் மாலி வீரர் பக்லே கோல் போட்டார். இறுதியில் மாலி அணி 2-0 என்ற கோல் கணக்கில் மெக்சிக்கோவுக்கு அதிர்ச்சி அளித்தது. இதே பிரிவில் நடந்த இன்னொரு ஆட்டத்தில் கேஸ்டன் பெரீரோ கோலின் உதவியுடன் உருகுவே அணி 1-0 என்ற கோல் கணக்கில் செர்பியாவை சாய்த்தது.

# நடாலுக்கு பாராட்டு



(பரிஸ்)

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் பட்டத்தை 9 முறை கைப்பற்றி சரித்திரம் படைத்துள்ள ஸ்பெயினின் ரபெல் நடாலை, மூன்று முறை சம்பியனான பிரேசில் முன்னாள் வீரர் கஸ்டவோ குயர்ட்டன் வெகுவாக பாராட்டியுள்ளார். 10 ஆண்டுகளில் 9 முறை பிரெஞ் ஓப்பனை வென்று நடால் சாதித்துள்ளார். நிச்சயம் இனி ஒரு போதும் இச்சாதனையை யாராலும் செய்ய முடியாது. அதற்கு சாத்தியமே இல்லை என்றார்.

அவரது பாராட்டுக்கு உடனடியாக நன்றி தெரிவித்துக் கொண்ட நடால் பின்னர் கூறுகையில், உண்மையிலேயே எனது சாதனையை முறியடிப்பது என்பது மிகவும் கடினமான விடயம் தான். அதே நேரத்தில் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். என்னால் இதைச்செய்ய முடிந்தது என்றால், நிச்சயம் வேறு யாராவது ஒருவரால் இதை நிகழ்த்த முடியும் என்றார்.

# பிபாவின் தடையால் கவலையில்லை


இந்தோனேசிய கால்பந்து அமைப்புக்கு (பி.எஸ்.எஸ்.ஐ.) பிபா விதித்த தடை குறித்து கவலைப்படத் தேவையில்லை என்று அந்நாட்டு விளையாட்டுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை சுவிட்சர்லாந்தின் ஜூரிச் நகரில் நடந்த பிபா செயற்குழு கூட்டத்தில் பிஎஸ்எஸ்ஐ-க்கு தடை விதிக்கப்பட்டது. பிஎஸ்எஸ்ஐ-யின் மோசமான நடவடிக்கைகளின் விளைவே தடைக்கு காரணம் என்று பிபா விளக்கமளித்தது.

தடை காரணமாக பிபா மற்றும் ஆசிய கால்பந்து அமைப்பு நடத்தும் அனைத்து சர்வதேச போட்டிகளிலும் இந்தோனேசிய அணி பங்கேற்க இயலாது.

இதனிடையே இந்தோனேசிய விளையாட்டு அமைச்சகம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நாங்கள் விரும்பியது நடக்கவில்லை. பிபாவின் அறிவிப்பு (தடை) குறித்து அதிகமாக கவலைப்படத் தேவையில்லை. தேசிய கால்பந்து அமைப்பை உண்மையும், நிலையானதாகவும், வெளிப்படையாகவும் உள்ள சிறந்த நிர்வாகமாக மாற்றியமைக்க நாங்கள் நம்பிக்கையாகவும், உறுதியாகவும் உள்ளோம். இதன் பிறகு சிறந்த சாதனைகளை படைப்போம். இது நீண்ட காலம் கனவாகவே இருக்காது என்று கூறியுள்ளது.

# அதிக ஓட்டம்; குக் மகிழ்ச்சி



(லண்டன்)

கடந்த 18 மாதங்கள் ஒரு கப்டனாக பல இன்னங்களை அனுபவித்திருக்கின்றேன். இந்த நிலையில் டெஸ்டில் இங்கிலாந்து சார்பாக அதிக ஓட்டங்கள் பெற்ற வீரர் என்ற சிறப்பைப் பெற்றதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன் என இங்கிலாந்து அணிக் கப்டன் குக் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்களில் டெஸ்டில் அதிக ஓட்டங்கள் குவித்தவராக கடந்த 22 ஆண்டுகளாக திகழ்ந்த கிரஹாம் கூச்சின் (118 டெஸ்டில் 8,900) சாதனையை தற்போதைய கப்டன் அலஸ்டயர் குக் நியூசிலாந்திற்கு எதிரான இரண்டர்வது டெஸ்ட் போட்டியின்போது முறியடித்தார்.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே குக் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது, இது எனக்கு மிகவும் சிறப்பு வாய்ந்த அற்புதமான நாள். இங்கிலாந்து வீரர்களில் அதிக ஓட்டங்கள் எடுத்தோர் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்த மகிழ்ச்சியை என்னால் விபரிக்க முடியவில்லை. ஆனால் நான் விளையாடி வரும் விதத்தைப் பார்க்கும் போது, இச்சாதனைக்கு நான் தகுதியானவன் அல்ல. கடந்த 18 மாதங்கள் ஒரு கப்டனாக கடினமான காலகட்டாக அமைந்தது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, டெஸ்ட் போட்டிகளில் குக்கினால் பல சாதனைகளை முறியடிக்க முடியும் என இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டன் ஸ்ரோர்ஸ் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவுக்கெதிரான டெஸ்ட் முஷ்பிகுர் ரஹிம் விலகல்?

(டாக்கா)

பங்களாதேஷ் அணி கப்டன் முஷ்பிகுர் ரஹிம் கைவிரலில் ஏற்பட்ட காயம் காரணமாக இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடுவது சந்தேகமாக உள்ளது.

பங்களாதேஷ் செல்லவுள்ள இந்திய அணி, ஒரே ஒரு டெஸ்ட், மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. டெஸ்ட் போட்டி பதுல்லாவில் எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. சமீபத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் பங்கேற்ற பங்களாதேஷ் டெஸ்ட் அணி கப்டன் முஷ்பிகுர் ரஹிமின் கைவிரலில் காயம் ஏற்பட்டது. இவர், இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டி ஆரம்பமாவதற்கு முன் காயத்தில் இருந்து முழுமையாக குணமடைந்துவிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒருவேளை இவர், பூரண குணமடையாவிட்டால் டெஸ்ட் போட்டியில் பங்கேற்பது சந்தேகம்தான்.

காயத்தில் இருந்து மெல்ல மீண்டு வரும் முஷ்பிகுர், நேற்று முன்தினம் துடுப்பாட்ட பயிற்சி செய்தார். இருப்பினும் இவரது கைவிரலில் வலி இருப்பதாகக் கூறினார். இது குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் (பி.சி.பி.,) பிஸியோதெரபிஸ்ட் தெபாஷிஸ் சௌத்தரி கூறுகையில், முஷ்பிகுர் ரஹிம் துடுப்பாட்டப் பயிற்சியை ஆரம்பித்தது மகிழ்ச்சி. போட்டி ஆரம்பிக்க இன்னும் நாட்கள் இருப்பதால், காயத்தில் இருந்து பூரண குணமடைந்துவிடுவார் என நம்புகிறேன். இருப்பினும் இவர், விக்கெட் காப்பாளராகச் செயற்பட வேண்டியிருப்பதால் முழு உடற்தகுதியுடன் விளையாட முடியுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அடுத்த இரண்டு அல்லது மூன்று நாட்களில் இவர், இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் விளையாடுவாரா என்பது தெரிந்துவிடும், என்றார்.

# பந்து வீச்சு, துடுப்பாட்டத்தில் கம்சன் ஜொலிப்பு
# நெல்லியடி மத்திய ம.விக்கு அபார வெற்றி

(நெல்லியடி)

கம்சனின் சிறப்பான துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சின் மூலம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 106 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டமொன்று கடந்த 28ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி கம்சன், தர்சன், சிந்துஜன், விஜிபன் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 42 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கம்சன் 51, தர்சன் 34, சிந்துஜன் 26, விஜிபன் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஜிந்தன், டன்சன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 220 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி அணி விஜிபன், கம்பன், சிறி கிருஷ்ணா ஆகியோரின் பந்துவீச்சிற்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறியதுடன் வேகமாகவும் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 31.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் தனுசன் 25, டிலக்ஷன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விஜிபன், சிறிகிருஷ்ணா, கம்சன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 106 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

விளையாட்டுச் செய்திகள்

# கூடைப்பந்து இறுதியில் சென்றலைட்ஸ், ஜொலிஸ்ரார்

(கொக்குவில்)

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு யாழ். சென்றலைட்ஸ் மற்றும் ஜொலிஸ்ரார் அணிகள் முன்னேறியுள்ளன.

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த 30ஆம் திகதி நடைபெற்றன.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியும் சென்றலைட்ஸ் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சென்றலைட்ஸ் அணி 67-50 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் அணியும் பற்றீசியன்ஸ் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜொலிஸ்ரார் அணி 64-51 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

# மாகாண பெருவிளையாட்டு வடமராட்சி வலயம் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் விளையாட்டுப் பிரிவினால் நடாத்தப்பட்டு வரும் மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகளில் வடமராட்சி மற்றும் வலிகாமம் கல்வி வலயங்களுக்கிடையில் கடும் போட்டி நிலவி வருகின்றது.

மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டு போட்டிகளில் முதலிரு கட்டங்கள் நிறைவுற்றுள்ளன. இதில் வடமராட்சி கல்வி வலயம் 113 புள்ளிகளைப் பெற்று முதலிடத்திலும், வலிகாமம் கல்வி வலயம் 104 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்திலும் உள்ளன. ஏனைய போட்டிகளில் இரு வலயங்களுக்குமிடையில் முதலிடத்தைப் பிடிக்க கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முதலாம், இரண்டாம் கட்டப் போட்டிகள் நிறைவுற்ற நிலையில் வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் நேற்று முன்தினம் நிறைவடைந்த போட்டிகளின் முடிவுகளை வெளியிட்டுள்ளார். அதன் விபரம் வருமாறு:

| நிலை | வயலம் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | வடமராட்சி | 113 |
| 02 | வலிகாமம் | 104 |
| 03 | யாழ்ப்பாணம் | 085 |
| 04 | கிளிநொச்சி | 062 |
| 05 | வவுனியா தெற்கு | 037 |
| 06 | வவுனியா வடக்கு | 033 |
| 07 | முல்லைத்தீவு | 031 |
| 08 | மடு | 018 |
| 09 | தென்மராட்சி | 010 |
| 10 | துணுக்காய் | 009 |
| 11 | மன்னார் | 006 |
| 12 | தீவகம் | 000 |

# வென்றது சென்.ஜோண்ஸ்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் சென். ஜோண்ஸ் கல்லூரி மற்றும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையிலான போட்டி கடந்த 28ஆம் திகதி சென். ஜோண்ஸ் க்ல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அபினஸ் 70, டனுஜன் 51 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 295 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி டனுஜனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி 23.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் எந்தவொரு வீரரும் பொறுப்புடன் ஆடவில்லை. பந்து வீச்சில் டனுஜன் 15 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 155 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

# கிளி. இந்து வெற்றி
## பழைய மாணவர் போட்டியில்

(கிளிநொச்சி)

வடக்கின் நீலங்களின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி தொடர்ந்து கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அணிகளுக்கிடையில் நடைபெற்ற பழைய மாணவர் அணிகளுக்கிடையிலான ருவென்ரி-20 போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணி வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யோ. நிரோஜன் 47, யுட்வின்சன் 40, து. நிரோஷன் 24, மயூரன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லகிதரன், அஜித் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 171 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சரண்ராஜ் 30 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் யூட் வின்சன் ஐந்து, தேனுஜன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக யூட்வின்சன் தெரிவானார். இப்போட்டி நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. (160)



யாழ். மாவட்ட மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் தொடர்ந்து ஒன்பதாவது முறையாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்ட தெல்லிப்பளை பிரதேச செயலக பெண்கள் அணியைக் காணலாம். கடந்த 30ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கரவெட்டி அணியை வீழ்த்தி தெல்லிப்பளை பிரதேச செயலக அணி சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (93)

# மாவட்ட மட்ட வலைப்பந்தாட்டம்
## 9ஆவது முறையாக தெல்லிப்பளை சம்பியன்

(கோப்பாய்)

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் ஒன்பதாவது ஆண்டாக தெல்லிப்பளை பிரதேச செயலக அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

யாழ். மாவட்ட பிரதேச அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட பெரு விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி கடந்த 30ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும், சங்கானைப் பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

கடந்த எட்டு ஆண்டுகளாக மாவட்ட மட்ட வலைப்பந்துப் போட்டியில் ஆதிக்கம் செலுத்தி வரும் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியின் வெற்றிப் பயணத்தை நிறைவுக்குக் கொண்டு வரும் முனைப்புடன் சங்கானைப் பிரதேச செயலக அணி செயற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஒன்பதாவது முறையாக மகுடம் சூடும் முனைப்புடன் செயற்பட்ட தெல்லிப்பளை பிரதேச செயலக வீராங்கனைகளின் திறனுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் சங்கானைப் பிரதேச செயலக வீராங்கனைகள் திணறியதை களத்தில் அவதானிக்க முடிந்தது. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பளை பிரதேச செயலக அணி 38-23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று ஒன்பதாவது முறையாக மாவட்ட மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. ஏனைய போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## கூட்டமைப்புக்குள்ளேயே போட்டி உண்டாகும்!

இம்முறை அரசாங்கத்தை இலக்கு வைத்து கூட்டமைப்பினரால் எதிர் பிரசாரங்களை முன்னெடுக்க முடியாது. இவ்வாறானதொரு பின்புலத்தில், ஜனாதிபதியின் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் கூட ஓரளவு தமிழ் மக்களின் வாக்குகளை பெறக்கூடிய வாய்ப்புண்டு.

வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகித்துவரும் கட்சிகள் மத்தியிலும் போட்டித் தன்மை உருவாகக் கூடியளவிற்கே நிலைமைகள் காணப்படுகின்றன. ஏனெனில் வடக்கு மாகாணத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஏழாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த ஏழில்தான் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்துவரும் அனைவரும் வெற்றிபெற வேண்டும். ஆனால் நிச்சயம் ஒரு சிலர் தோற்றே ஆக வேண்டியளவிற்கு வடக்கின் கள நிலைமைகள் காணப்படுகின்றன.

வடக்கில் இம்முறை கஜேந்திரகுமார் தலைமையிலான வேட்பாளர் அணி கூட்டமைப்பிற்கு ஒரு சவாலாக அமையக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. அதே வேளை முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனக்கென ஒரு வாக்கு வங்கியை பேணிவரும் ஒருவர். அந்தவகையில் அவரும் ஓர் ஆசனத்தை வெற்றிகொள்வதற்கான வாய்ப்புண்டு.

தற்போதுள்ள சூழலில் இப்போதுள்ள நிலைமைதான் தொடரப் போகின்றது என்றால், கூட்டமைப்பிலுள்ள ஒருவரை விடவும் ஐக்கிய தேசியக் கட்சியில் அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கின்ற தமிழர் ஒருவரிடமிருந்து அதிக நன்மையை பெறமுடியுமென்று சிந்திக்கும் மக்கள் ஆளும் கட்சியின் பலமான வேட்பாளர்களையும் ஆதரிக்க வாய்ப்புண்டு.

இவ்வாறானதொரு அரசியல் சூழலில்தான், தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், சிறிதரன், சரவணபவன் ஆகியோர் மீண்டும் வெற்றிக்கு முயற்சிக்க வேண்டியிருக்கும். அதேவேளை, இதுவரை தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துவந்த எம்.ஏ.சுமந்திரனும் இம்முறை வடக்கில் போட்டியிடவுள்ளதாக தகவலுண்டு. கூட்டமைப்பைப் பொறுத்தவரை அவரும் வெற்றி பெறவேண்டும். அதேபோல் புளொட் இயக்கத்தின் தலைவர் சித்தார்த்தன் புளொட் இயக்கத்தின் சார்பில் போட்டியிடவுள்ளார். தான் போட்டியிடும் தகவலை அவர் ஏலவே பகிரங்கமாக தெரிவித்துமிருக்கிறார். அவர் கடந்த மாகாண சபை தேர்தலில் மூன்றாவது நிலையில் விருப்பு வாக்குகளை பெற்ற ஒருவர். அவரும் வெற்றிபெறவே முயற்சிப்பார். இவ்வாறானதொரு சூழலில், வடக்கின் தேர்தல் களம் கூட்டமைப்பிற்குள்ளேயே ஒரு போட்டியை நிச்சயம் உருவாக்கப் போகிறது.

**- யதீந்திரா**

# சொன்னார்கள்....



### ஜனநாயகப் போராட்டம்! புங்குடுதீவு மாணவி பாலியல்

வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்தில் அதில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு உடனடியாக தண்டனை கொடுக்க வேண்டும் என்ற போராட்டம் சம்பவம் நடந்த பகுதியில் மட்டுமல்ல நாட்டின் சகல பகுதிகளிலும் இன மொழி பேதமின்றி நடந்துள்ளது. இப்படியொரு போராட்டத்தை மூன்று தசாப்தங்களாக பலர் பார்த்திருக்க மாட்டார்கள் ஜனநாயகப் போராட்டங்களை அடக்கியதும், அதனால் ஏற்பட்ட வன்முறைகளும், உயிர் இழப்புகளுமே வரலாறாக உள்ளது. நியாயங்களுக்கான பல போராட்டங்கள் இல்லாமல் ஆக்கப்பட்டது. நீதிமான்கள், நேர்மையாளர்கள் பலர் ஜனநாயகப் போராட்டங்கள் மறுக்கப்பட்டதால் புலம்பெயர்ந்துள்ளார்கள் பலர் அழித்தொழிக்கப்பட்டார்கள்.

**- அ. விஜயன்**

### பிற்போக்குத் தமிழ்த் தேசியவாத விநோதம்

கஜேந்திரகுமார் சுமந்திரன் மோதலில் ஒரு வரலாற்று விநோதம் உள்ளடங்கி இருப்பதைக் காணமுடியும். ஜி.ஜி. பொன்னம்பலம் 1944 இல் தமிழ்க் காங்கிரஸை உருவாக்கி அதில் செல்வநாயகத்தையும் இணைத்தே 1947 பொதுத் தேர்தலில் பங்கு பற்றி வெற்றிபெற்றனர். எனவே தமிழ்க் காங்கிரஸிடம் ஆரம்பம் முதல் அமைச்சுப் பதவி பெற்று ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணக்க அரசியல் செய்வது கொள்கையாக இருந்து வந்தது. அதனாலேயே தமது

# ஸ்மார்ட் போன்களுக்கு எதிரான இயக்கம்!

இது ஸ்மார்ட்போன்களின் காலம் என்பதில் சந்தேகமில்லை. முன்னணி செல்போன் நிறுவனங்கள் போட்டி போட்டிக்கொண்டு புதிய மாதிரி ஸ்மார்ட்போன்களை அறிமுகம் செய்து கொண்டிருக்கின்றன. ஸ்மார்ட்போன்களின் எண்ணிக்கை மட்டும் பெருகவில்லை. அவற்றின் ஆற்றலும் கணிசமாக அதிகரித்து வருகிறது. 2 ஜிபி கொள்திறன் கொண்ட போன்கள் அறிமுகமாகத் துவங்கி இருக்கின்றன. இன்னொரு பக்கம் 4ஜி அலை வீசத் துவங்கியிருக்கிறது.

சாதாரண போன் பயனாளிகளைக் குறிவைத்து சில ஆயிரம் விலையிலேயே ஸ்மார்ட்போன்கள் சந்தையில் கிடைக்க ஆரம்பித்துள்ளன. இத்தகைய முதல்முறை ஸ்மார்ட்போன் பயனாளிகளுக்குக் கையைக் கடிக்காத விலையில் ஸ்மார்ட்போன் கிடைக்கவேண்டும் என்பதற்காக புதிய போன்கள் அறிமுகமாகின்றன.

அடுத்த தலைமுறை ஸ்மார்ட் போன்கள் எந்த அளவுக்கு ஆற்றல் கொண்டவையாக இருக்கும் என தெரியவில்லை. ஆனால், ஸ்மார்ட்போன்கள் நம் வாழ்க்கையில் இன்னும் தீவிரமாக ஆதிக்கம் செலுத்தும் என்பதை மட்டும் உறுதியாக சொல்லலாம்.

ஸ்மார்ட்போன்களின் துணை சாதனமாக ஸ்மார்ட் வோட்ச்களும் பிரபலமாகிக் கொண்டிருக்கும் நிலையில் ஸ்மார்ட்போன்களுக்கு எதிரான முயற்சிகளும் நடந்து வருவதுதான் ஆச்சர்யம். இந்தப் போக்குக்கான சமீபத்திய உதாரணம், லைட் போன்.

இந்த லைட் போன் எல்லா விதங்களிலும் ஸ்மார்ட்போனுக்கு எதிரானது என்று சொல்லலாம். ஸ்மார்ட்போன் என்றவுடன் நினைவுக்கு வரும் எந்த விஷயமும் இதில் கிடையாது. அகண்ட திரை இதில் இல்லை. இணையத்தில் உலாவ பிரவுசர் கிடையாது. கேம்கள் ஆட முடியாது. இதில் மெனுவும் கிடையாது. மேலும் கீழும் ஸ்க்ரோல் செய்வது, ஸ்பீட் டயல் செய்வது ஆகிய வசதிகளும் இதில் சாத்தியமில்லை.

வழக்கமாக ஸ்மார்ட்போன்களில் செய்யும் எதையும் இதில் செய்ய முடியாது.

இந்த போனில் பேசலாம், குறுஞ்செய்தி அனுப்பலாம். அவ்வளவுதான். ஆரம்ப கால செல்போன்கள் எப்படி இருந்தனவோ அப்படித்தான் இந்த போனும் இருக்கிறது. ஆனால் இது வெறும் "சாதாரண" செல்போன் இல்லை.

இதன் வடிவமைப்பில் ஒரு புதுமை இருக்கிறது. ஸ்மார்ட் போனுக்கு எதிரான கருத்தாக்கம் தான் இதன் அடிப்படை.

இந்த போன் கிரெடிட் கார்ட் அளவுக்குத்தான் இருக்கிறது. இரண்டு கிரெடிட் கார்ட்களை சேர்த்து வைத்ததுபோல இருக்கும் இதன் எடை, 36 கிராம் தான். இதில் சின்ன சிம்கார்டை போட்டுக்கொள்ளலாம் அவ்வளவுதான். இன்றைய போன்களில் பளிச்சிடும் பல வண்ண டிஸ்பிளேக்கு மாறாக இதில் அந்தக் காலத்து டொட் மட்ரிக்ஸ் திரை வடிவம்தான். போனை ஓன் செய்தால் கடிகாரமும், டயல் செய்வதற்கான எண்களும் தோன்றும், வேறு எதுவும் இருக்காது. மெனுவும் இல்லை என்பதால் மேற்கொண்டு எந்த வசதியையும் தேடிப்பார்க்க அவசியம் இல்லை.

முன்பே சொன்னது போல, இதன் மூலமாக போன் செய்யலாம், குறுஞ்செய்தி அனுப்பலாம். ஆனால் ஒன்று, இதன் பற்றரி 20 நாள்களுக்கு தாக்குப்பிடிக்கும்.

ஸ்மார்ட்போன்களின் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெறுவதற்காக இந்த போன் என்கின்றனர் இதனை உருவாக்கியுள்ள இளம் நிறுவுனர்கள்.

உங்கள் போனில் இருந்து விலகிய போன் என்றே இந்த போனை அவர்கள் முன்வைக்கின்றனர். எப்போதும் நோட்டிபிகேஷன் மூலம் குறுக்கிட்டுக்கொண்டிருக்கும் ஸ்மார்ட்போன்களுக்கு மாற்றாக இந்த போனை உருவாக்கியதாக சொல்கின்றனர். அழைப்பு வராத நேரங்களில்கூட அடிக்கடி போனை எடுத்துப் பார்த்துக்கொண்டிருக்கும் ஸ்மார்ட்போன் பித்தர்களுக்கு இந்த போன் சரியான விடுதலையாக இருக்கும் என்பது நிறுவுநர்களின் நம்பிக்கை.

நாங்கள் புதிதாக எந்த தொழில்நுட்பத்தையும் உருவாக்கவில்லை, ஏற்கனவே உள்ள தொழில்நுட்பத்தைப் புதிதாகப் பயன்படுத்தியிருப்பதாக சொல்கின்றனர். எளிமை தான் இதன் சிறப்பு என்கின்றனர்.

இதன் நிறுவநர்கள் Joe Hollier மற்றும் Kaiwei Tang, நியூயோர்க்கில் கூகுள் நிறுவனத்துடன் இணைந்து இந்தப் போனுக்கான கருத்தாக்கத்தை உருவாக்கினர். அடுத்த ஆண்டளவில் இந்தப் போன் சந்தைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் போன் எந்த வகையான வரவேற்பைப் பெறும் என்பது தெரியவில்லை. ஆனால் கருத்தாக்கம் கவனத்தை ஈர்க்கிறது. கவனச்சிதறல்களுக்கு இடம் கொடுக்காமல் அடிப்படையில் போன் எதற்காகவோ அதற்கு மட்டுமே பயன்படுத்தும் நிலையை ஏற்படுத்துவதுதான் லைட்போனின் நோக்கம்.

இதற்கு ஸ்மார்ட்போனை வாங்காமல் சாதாரண போனை வாங்கலாமே என்று கேட்கலாம். ஆனால் ஸ்மார்ட்போன் யுகத்தில் சாதாரண போனை வைத்திருப்பது ஏதோ பின் தங்கிப் போய்விட்ட உணர்வை ஏற்படுத்தலாம். மாறாக லைட்போன் போன்ற ஸ்மார்ட்போனுக்கு எதிரானதாக உருவாக்கப்பட்ட போனை பயன்படுத்தும் போது, நான் ஸ்மார்ட்போனுக்கு எதிரானவன் என்ற கருத்தை உணர்த்த முடியும். முக்கியமாக நமக்கு நாமே சொல்லிக்கொள்ள முடியும்.

ஆனால், லைட்போன் ஸ்மார்ட்போனுக்கு மாற்று இல்லை. ஸ்மார்ட்போன் பயன்பாட்டை குறைத்துக்கொண்டு இதைப் பயன்படுத்தலாம். அதாவது பேக் அப் போனாக வைத்துக்கொள்ளலாம். பிக்னிக் அல்லது சுற்றுலா செல்லும்போது இதைப் பயன்படுத்தலாம்.



முக்கியமான விஷயம் என்ன என்றால், ஸ்மார்ட்போன்களும் அதன் எண்ணற்ற செயலிகளும் நம் வாழ்க்கையில் வியாபித்திருக்கும் நிலையில் நமது சுயத்தை மீட்டுக்கொள்ள இது கைகொடுக்கும்.

ஸ்மார்ட்போன் யுகத்தின் முக்கிய சிந்தனை இது. தொழில்நுட்பத்தின் தாக்கமும், வீச்சும் அதிகமாகிக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் அதில் விடுபட்டு நிற்பதற்கான வழியையும் நாம் தேடியாக வேண்டும் என்னும் கருத்தை இது வலியுறுத்துகிறது.

கட்சிக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்ற பெயரை வைத்து தனது நிலைப்பாடு, தனிநாடு, தனித்தேசம் என்பது அல்ல என்பதைப் பெயரில் வெளிப்படுத்திக்கொண்டவர் ஜி.ஜி. பொன்னம்பலம்.

அதே ஜி.ஜி.யின் பேரனான கஜேந்திரகுமார் இப்பொழுது அதே தமிழ்க் காங்கிரஸின் கொள்கை இரண்டு தேசம் எனக்கூறி நிற்கிறார் அன்று ஜி.ஜி.சமஷ்டியையோ அல்லது தமிழீழத்தையோ ஆதரித்தவர் அல்லர். ஆனால் இன்று பேரனார் அதே சமஷ்டியின், தமிழீழத்தின் தொடர்ச்சியான இரண்டு தேசக் கொள்கையை உயர்த்தி நிற்கிறார்.

மறுபுறத்தில் சமஷ்டி, தமிழீழத்தை முன்னிறுத்தி தமிழரசுத் தந்தை எனப் பெயரெடுத்த எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் வாரிசு வரிசையில் வந்துள்ள எம்.ஏ.சுமந்திரன் இணக்க அரசியலினதும் அர்த்தமுள்ள அதிகாரப்பரவலாக்கம் பற்றியும் வாதிட்டு நிற்கிறார்.

இதில் காணக்கூடியது மற்றொன்று உள்ளது. தமிழ் மக்கள் இன ஒடுக்குமுறைக்கு நீண்டகாலம் உட்பட்டு வந்த மக்கள். அவர்கள் மத்தியில் எப்போதும் எதிர்ப்பு அரசியலுக்கு ஒரு இடம் இருந்தே வந்துள்ளது. இது ஒடுக்கப்படுவோர் எவராக இருப்பினும் அவர்களிடையே இருந்து வரும் இயல்பாகும். அதனாலேயே 1949 இல் இருந்து தமிழரசுக் கட்சி முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் வரையான எதிர்ப்பு அரசியலுக்கு தமிழ் மக்கள் பெரும் ஆதரவு தெரிவித்து வந்துள்ளனர். அந்த ஆரதவைத் தமிழரசுக் கட்சி தனது பாராளுமன்ற அரசியலுக்கும் விடுதலைப் புலிகள் தமது தூரநோக்கற்ற ஆயுதப்போராட்டத்திற்கும் பயன்படுத்திக் கொண்டனர். அதேபோன்று இணக்க அரசியலால் ஜி.ஜி.பொன்னம்பலம் தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் செல்வாக்கிழந்து கொண்டவராகவும் ஆகிக்கொண்டார்.

ஆனால் இன்று அதே ஜி.ஜி.யின் பேரன் கஜேந்திரகுமார் எதிர்ப்பு அரசியலைக் கையில் எடுத்துள்ளார். அதேபோன்று விடுதலைப்புலிகள் முன்னெடுத்த தவறான அரசியல் கோஷம் போன்று தூரநோக்கற்ற யதார்த்தம் புரியாத கொள்கையான இரண்டு தேசக் கொள்கையை முன்வைத்து நிற்கின்றார். இது எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் கைகொடுக்கும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தமிழ்க் காங்கிரஸும் பெருநம்பிக்கை கொண்டுள்ளன. இதற்குப் புலம் பெயர்ந்த நாடுகளின் மேட்டுக்குடித் தமிழ் அமைப்புக்கள் பல வழிகளிலும் உதவிக் கொள்ளவே செய்வார்கள்.

எவ்வாறாயினும் இவர்கள் எவருமே பழைமைவாதப் பிற்போக்குத் தமிழ்த் தேசியவாதத்திலிருந்து ஒரு முற்போக்கான தமிழ்த் தேசியவாத நிலைப்பாட்டிற்கு வர முடியாதவர்களாவர். அதற்குக் காரணம் அவர்களின் ஆண்ட பரம்பரையில் வந்த உயர்வர்க்க, உயர்சாதிய, மேட்டுக்குடி ஆதிக்க நிலைப்பாடாகும். அதுவே தமிழர் தரப்பு ஆதிக்க அரசியலாகத் தொடர்கிறது. இது ஏகப்பெரும்பான்மையான உழைக்கும் மக்களுக்கும் இன ஒடுக்கு முறைக்கு உள்ளாகி நிற்கும் தமிழ்த் தேசிய இனத்திற்கும் எவ்வித விடிவையோ விமோசனத்தையோ கொண்டு வந்துவிட மாட்டாது.

**- காலகண்டன்**



# ஆகாயத்திலிருந்து வந்த குரல்

ஒரு படகில் பல பயணிகள் பயணம் செய்து கொண்டிருந்தனர். அதில் ஒரு ஞானியும் இருந்தார். அவரைப் பார்த்து மற்ற பயணிகள் கேலியும், கிண்டலும் செய்தனர். அவர் தியானத்தில் அமர்ந்தார்.

இந்நேரம் அவர் எதுவும் செய்ய மாட்டார் என்பதைத் தெரிந்துகொண்ட மற்றவர்கள், அவரை வேண்டுமென்றே அடித்தனர். அப்போதும் அவர் தியானத்தில் இருந்தார். அவர் கண்களிலிருந்து அன்பு, கண்ணீராய் வந்து கொண்டிருந்தது. அப்போது ஆகாயத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

"அன்புக்குரியவனே, நீ விரும்பினால் இந்தப் படகை நான் கவிழ்த்து விடுகிறேன்!" அப்போதும் சாதுவின் தியானம் கலையவில்லை. அடித்தவர்கள் இப்போது என்ன நடக்குமோ என்று பயந்தார்கள். விளையாட்டு வினையாயிற்றே என்று நினைத்து அவர்கள் ஞானியின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டனர்.


சாதுவின் தியானம் முடிந்தது. சுற்றிலும் அச்ச உணர்வுடன் மற்றவர்கள் நிற்பதைப் பார்த்தார்.

"கவலைப்படாதீர்கள்," என்று அவர்களிடம் கூறிவிட்டு ஆகாயத்தை நோக்கி வணங்கி, "என் அன்பான கடவுளே, நீ ஏன் சாத்தானின் மொழியில் பேசுகிறாய்? நீ விளையாட வேண்டும் என்று விரும்பினால் இந்த மக்களின் புத்தியை மாற்று. அதை விட்டுவிட்டு படகைக் கவிழச் செய்வதால் என்ன பயன்?" என்று கேட்டார்.

ஆகாயத்திலிருந்து பதில் வந்தது, "நான் மகிழ்ச்சி அடைந்தேன். நீ சரியான உண்மையை அறிந்து கொண்டாய். முன்னால் ஒலித்தது என் குரல் அல்ல. எவன் ஒருவன் சாத்தானின் குரலை அறிந்து கொள்ள முடியுமோ. அவனால்தான் என் குரலையும் உணர முடியும்."

# உத்தம வில்லனும், கமலஹாசனும்

**- வ.ஸ்ரீநிவாசன் -** 2



"ராஜ பார்வை" கமல்ஹாசனை நிமிர்ந்து பார்க்க வைத்தது. அதில் சில காட்சிகள் வழக்கமான தமிழ் சினிமாவுக்கு முற்றிலும் மாறாக இருந்தன; இன்னமும் நினைவில் இருக்கின்றன.

சிறுவன் மேலே பார் (Bar) கம்பியில், தொங்கிக் கொண்டிருக்கும் போது அதில் விளையாட ஏற்றிவிட்ட தகப்பனார் மாரடைப்பு வந்து சாவார். அந்தச் சிறுவன் கை நழுவி அடியற்ற பள்ளத்துக்குள் கீழே விழுந்து கொண்டே இருப்பான்.

"அந்தி மழை"ப் பாடலைக் காட்சிப் படுத்திய விதம், "ரிடிக்யுலஸ்", என்று சொல்லிக் கொண்டே எப்போதும் எரிச்சலில் இருக்கும் மாதவியின் தந்தை, சித்தியின் கூச்சமுற வைக்கும் பொய்ப்பாசம், அற்புதமான தாத்தா-பேத்தி உறவு - இவை போல், பாசாங்கு இல்லாத, திணிக்கப்படாத, இயல்பாகவே எழுந்த காட்சிகள்.

முக்கியமாகப் பலரும் போற்றும் "நாயகன்" என்னும் ஆழமேயில்லாத பாசாங்குப் படம், அதை விட நல்லதே என்றாலும் திசை தெரியாத, வன்முறையைப் பெரிதும் நம்பி எடுக்கப்பட்ட, மிகச் சிறந்த கடவுள் எதிர்ப்புப் படமாக வந்திருக்க வேண்டிய "மகாநதி".

"குருதிப் புனல்" மற்றும் "உன்னைப் போல் ஒருவன்" இரண்டும் ஹிந்திப் படங்களின் தமிழ் ஆக்கங்கள். "த்ரோகாலி"ல் இருக்கும் ஆன்மீகப் போராட்டத்தை கமல்ஹாசன் என்னும் நட்சத்திர பிம்பத்தால் முழுதாய் சுவீகரிக்க முடியவில்லை. அதனால்தான் துரோகி, (ஒரு வேளை "துரோகி கமலஹாசன்" என்னும் பெயர் வந்து விட வாய்ப்பு இருந்ததால்) என்னும் சரியான பெயர் குருதிப் புனலாய் மாற்றப்பட்டு வந்தது. உன்னைப் போல் ஒருவனில் அசலிலிருந்து மாற்றப்பட்ட விஷயங்கள் பிழை மிகுந்து, படத்தின் தீவிரத் தன்மையைப் பெரிதும் குலைத்து இருந்தன. "எ வெட்னஸ்டே"யில் நசுருதீன் ஷாவின் நடிப்பை வேறு முதலிலேயே பார்த்து விட்டதால் நிலைமை அவருக்கு சாதகமாய்ப் போய் விட்டது.

"தேவர்மகன்" வணிக வெற்றியை மட்டுமே நோக்கி எடுக்கப்பட்ட நல்ல படமே போன்ற நடுவாந்திரப் படம். "அன்பே சிவம்" அதை விட அபாயமானது. நல்ல படம் என்று சொல்லி, நல்ல படம் என்று நம்பப்படுகிற மோசமான படம் என்பதால்.

"ஹே ராமி"ல் ராணி முகர்ஜி வந்து விட்டு இறந்ததும் நடக்கும் நிகழ்வுகளும், நிலையும் சுமார் 20 நிமிடங்களுக்கு ஆச்சர்யமாகத் தீவிரமாக இருக்கும். அப்புறம் கமல், அவரது கொள்கைகள், வலிய புகுத்தப்பட்ட உடன் நிகழ்வுகள், செயற்கைத்தனங்கள் எல்லாம் படத்தை ஆக்ரமிக்கும். குணா, ஆளவந்தான் Disasters. நம்மவரில் நாகேஷ் மட்டும்தான்.

நகைச்சுவைப் படங்கள் பலதிலும் மிகச் சிறப்பாக நடித்திருக்கும் கமலஹாசன், ஒப்பனை மற்றும் தோற்ற மாறுபாடுகளின் உதவியில்லாமல் சாமான்ய மனிதராகவே வந்து நன்றாக நடித்திருந்தது மீண்டும் கோகிலா, மூன்றாம் பிறை போன்ற படங்களில். மூன்றாம் பிறையிலும் கடைசி மெலோட்ராமா காட்சி படத்தின் பொதுவான லயத்தோடு பொருந்தாமல் துருத்திக் கொண்டு நிற்கும்.

இவற்றையெல்லாம் போலல்லாது உத்தம வில்லன் படத்தில்தான் இயல்பான தீவிரமான காட்சிகள் மற்றும் நடிப்பு, குறிப்பாக கமலஹாசனின் நடிப்பு யதார்த்தமாக மலர்ந்துள்ளன.


அப்போதுதான் அக்கா தம்பி என்று தெரிந்து கொண்ட கமலஹாசனின் மகளும், மகனும் அணைத்துக் கொள்ளும் உணர்ச்சி மிகு தருணத்தில் அங்கு உள்ளே வரும் அந்தப் பையனின் காதலி அதைத் தப்பாய் எடுத்துக் கொள்ள, விவரம் சொல்லி அவளிடம் விளக்க முற்படும் மகனுக்கு ஓர் உதவியும் செய்யாமல் அவனுடைய தர்ம சங்கடத்தைப் பார்த்து தந்தை கமலஹாசன் சிரிப்பை அடக்க முடியாமல், கையைத் தட்டிக் கொண்டே அறைக்கு வெளியே செல்வதும், உள்ளே நுழையும் "என்ன" என்று கேட்கும் ஜெயராமிடம் "போய்ப் பாருங்கள்" என்று சொல்லி சிரிப்பை நிறுத்தாமலே போவதும்...... இது போன்ற காட்சியைக் கடைசியாக தமிழ்ப் படத்தில் எப்போது பார்த்தோம் என்ப்தே நினைவில் இல்லை.

தன் மகளும் தன் மகனும் ஒன்று சேர்ந்து விட்டார்கள். அப்போது நியாயமான, ஆனால் அந்தத் தருணத்தில் அபத்தமான, மன உடைவோடு பையனின் சிநேகிதி. இன்னும் சில நொடிகளில் அவள் சந்தேகம் நிவர்த்தியாகப் போகிறது. அதை சரி செய்து கொண்டிருக்க வேண்டிய அவகாசமோ, அவசியமோ தந்தைக்கு இல்லை. தன் மகளும் மகனும் சேர்ந்து விட்டார்கள். மனம் ஒன்றி விட்டார்கள். எந்த சிறுபிள்ளைத்தனமான உராய்வுகளும், வஞ்சிக்கப்பட்டு விட்ட உணர்வுகளும் இல்லை. தன் வாழ்வின் கடைசித் தருணங்கள்தாம்.

இருந்தாலும் என்ன? என் மகளும் மகனும் சேர்ந்து விட்டார்கள். அந்த சிநேகிதி, இன்னொரு சிறுமி, அவள் சந்தேகம், நியாயமான சந்தேகம் இதோ நிவர்த்தியாகப் போகிறது. இடையில் விளங்கி அவள் சந்தேகத்தை முடிக்கும் வரை கொஞ்ச நேரம் திண்டாடப் போகும் தன் மகன். ஆம் வாழ்வு முடியப் போகும் நேரம். அதுவே துயரம், அதுவே இந்த ஆனந்தம் நிகழக் காரணமும்.

அந்தக் குழந்தைகளும் என்னமாய் நடித்திருக்கிறார்கள். கமலஹாசனின் 50+ வருட அனுபவத்தில் அவர் சீரியஸாக நடித்ததில் இது முதன்மையான காட்சி.


**(தொடரும்)**




## எழுத்துச் சக்கரம்

சுத்திச் சுத்திப் பாத்தாலும் தலைசுத்திப் பாத்தாலும்


A-Z





அப்பா... இப்பத்தான் லீவு விட்டிருக்காங்க...

இங்க வந்தா நீங்களும் விடமாட்டீங்களா?




## தெரியுமா?

ரயில் பாதை




அமெரிக்க நாட்டின் கொலராடோவிலுள்ள அன்டோனிட்டோ மற்றும் நியூமெக்சிகோவிலுள்ள சாமா நகரங்களுக்கு இடையே அமைந்துள்ள அமெரிக்காவின் மிக நீளமான குறுகிய ரயில் பாதையான இது குகைகள், செங்குத்துப் பாலங்கள் வழியாகக் கடந்து செல்லும்.



ஆஸ்திரேலியாவில் உள்ள குயின்ஸ்லாந்தின் கெய்ர்ன்ஸ் நகரிலிருந்து குரந்தா என்ற சிறிய நகரத்தை இணைக்கும் ரயில் பாதை இதுவாகும். ஆஸ்திரேலியாவின் பேரன் கார்ஜ் தேசியப் பூங்காவைக் கடந்து செல்கிறது. நீர்வீழ்ச்சிகள், மலைச்சரிவுகள், செங்குத்தான பாலங்கள் வழியாகச் செல்லும்போது மனதில் குளிரையும் பயத்தையும் தோற்றுவிக்கக் கூடியது.

இது தென்ஆப்பிரிக்காவின் மேற்கு கேப் பகுதியிலுள்ள ஜார்ஜ் மற்றும் நிஸ்னா பகுதிகளை இணைக்கும் ரயில் பாதை. 1908ஆம் ஆண்டு முதல் அவுட்டினிக்கா சூ ஜோ என்ற ரயில் செல்லும் இந்தப் பாதை 67 கி.மீ. நீளம் கொண்டது. 2009ஆம் ஆண்டுவரை நீராவி இயந்திரத்தின் மூலம் இயக்கப்பட்டு பின்னர் டீசல் என்ஜின்மூலம் இயக்கப்படுகிறது.







வடமத்திய அர்ஜென்டினாவிலுள்ள சால்டாவிலிருந்து சிலி நாட்டு எல்லையிலுள்ள லா போல்வோரில்லாவை இணைக்கும் பாதை இது ஆகும். 21 குகைகள், 13 பாலங்கள் வழியாகச் செல்லும் இந்த ரயில் பாதையின் பணி 1921ஆம் ஆண்டுமுதல் 1948 வரை நடைபெற்றுள்ளது.

## கணிதபதிர் சுடோகு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 8 | | 7 | | | 3 | |
| | | | 5 | | | 4 | | 9 |
| | | | 2 | | 4 | | | 8 |
| | | | | | 8 | 7 | 2 | |
| 7 | | | | | | | | |
| 9 | | | | | 3 | | | |
| | 4 | 2 | | | | | 5 | |
| 1 | | 6 | | | 9 | | | 4 |
| 3 | | 5 | 8 | | | | 1 | |

## எண்ணிப்பார் ஏழு வேறுபாடு







# மாணவரிடையே வாசிப்பு குறைவடைவதாக கவலை

இன்றைய மாணவர்கள் நூலகங்களுக்குச் சென்று நூல்கள் வாசிக்கும் நிலை குறைவடைந்து வருவது அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனவே மாணவர்களின் வாசிப்பு தன்மையை ஊக்குவிக்க வேண்டிய நிலை உள்ளது என வலி.மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

வலி. மேற்கு பிரதேசத்தில் வேள்ட்விசன் நிறுவனத்தின் உதவியுடன் 10 நூலகங்கள் திறக்கப்பட்டன. இவற்றின் போது அண்மையில் சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியில் நூலகம் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வின் போது சம்பத் வங்கி குறித்த நூலக பயன்பாட்டிற்கு தளபாடங்களையும் வழங்கியது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி.நாகரஞ்சினி. ஐங்கரன் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். இன்றைய நவீன கற்றல் முறைகள் மற்றும் கற்பித்தல் முறைக்கு ஊடாக இந் நூலகங்களின் பயன்பாட்டினை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். இதே வேளை இந் நூலகங்களுக்கு உள்ள வாசகர் வட்டத்தினை மேலும் விரிவடையச் செய்து அதன வாயிலாக போட்டிகளை ஏற்படுத்தி மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு முயற்சிக்க வேண்டும். இச் செயற்பாடுகள் தனித்த ஒருவரால் அன்றி ஒரு சமூகமாக இணைந்து மேற்கொளவதற்கு தயாராக வேண்டும். இந்நிலையிலேயே மாற்றங்கள் ஏற்படும்.இந்த நாட்டில் இரு இனங்களுக்கிடையே நடந்த அழிவாயுத யுத்தம் நிறைவுக்கு வந்ததன் பின்னர் தற்போது அறிவாயுத யுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இவ் யுத்தத்தில் நாம் வெற்றிபெற்றவர்களாக வேண்டுமாயின எமது சிறார்களின் அறிவு நிலையினை உயர்த்துவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும் சிறுவர்களைச் சுற்றி கல்விக்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும். ஆரம்பக் கல்வி மிக முக்கியமான நிலையில் உள்ளது இந் நிலையில் மகிழ்வான ஓர் கல்விச் சூழல் பேணப்பட வேண்டும். எனக் குறிப்பிட்டார்.

# "கருகும் மொட்டுக்கள்" விழிப்புணர்வு ஆற்றுகை



வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் , விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அனுசரணையில் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்ட கலாசார வ்ழிப்புணர்வு வார நிகழ்ச்த்திட்டத்தில் புத்தாக்க அரங்க இயக்கத்தின் இயக்குநர்களான எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரனின் நெறியாள்கையில் புத்தாக்க அரங்க இயக்க கலைஞர்களின் நடிப்பில் பெண்கள் வன்முறைக்கெதிரான "கருகும் மொட்டுக்கள்" விழிப்புணர்வு தெருவெளி ஆற்றுகை தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் நிகழ்த்தப்பட்டது.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளான தெல்லிப்பளை யூனியன கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி, இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், குளமங்கால் றோமன் கத்தோலிக்க பாடசாலை, மல்லாகம் மகாவித்தியாலயம், அளவெட்டி அருணோதயக்கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இவ் ஆற்றுகை இடம் பெற்றது.

தெருவெளி ஆற்றுகையின் ஆற்றுகையாளர்களாக கு.தவேன்சன், உ.கரிஸ், பா.ஜெயரூபன், யே.சானுஜன், தி.திஸ்னுகன், தி.தனுஜன், ரிதுசன்,சிந்துஜன், ஸ்ரீ.சாதுசன், கு.சருஜன், சி.சிவானுஜன், குபேரன், குயின்சன் ஆகியோர் நடித்துள்ளார்கள். பாடகர்களாக ஜெயவர்னன், ப.தக்சாந் ஆகியோரும் இசை வாத்தியக் கலைஞர்களாக (டொல்கி) யதுசன், திவாகர், (ஓகன்) -அபிசேக் ஆகியோரும் செயற்பட்டனர்.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட பெண்கள் வன்முறைக்கெதிரான விழிப்புணர்வு வாரத்திற்கு வலுச்சேர்க்கும் வகையிலும் பாடசாலை மாணவியரிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையிலும் இவ் ஆற்றுகை அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (63)

# காவேரி கலாமன்றின் இறுவட்டு வெளியீடு



காவேரி கலாமன்றத்தின் கிறிஸ்துவுக்காக சிறுவர் ஊழிய செயற்றிட்டத்தினூடாக நடாத்தப்பட்டு வரும் மூன்றாவது கிறிஸ்தவ ஒலி, ஒளி இறுவட்டு வெளியீடு கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. இவ் இறுவட்டில் போதகர் பிறஸ்காநதனின் பாடல்கள் அடங்கியுள்ளன. இந் நிகழ்வில் கௌரவிப்பும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (90)

# பதிவிறக்கப் பெட்டகம்

மியான்மாரின் ராகைன் மாநிலத்தைச் சேர்ந்த ரோஷிங்கிய முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகளும், அதனால் ஏற்பட்ட சமூக, பொருளாதார, வாழ்வியல் பிரச்சினைகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. வன்முறையைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவம் தவறிவிட்டது என்பதோடு, அரசாங்கத்துடன் இணைந்து, ரோஹிங்கிய முஸ்லிம்கள் மீது வன்முறைகளைப் பரப்புவதற்கு இராணுவம் துணை புரிந்ததாகவும், அரச ஆதரவில் முஸ்லிம்களுக் கெதிரான வன்முறை இடம்பெறுவதாகவும் பல்வேறு சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும், தொண்டு நிறுவனங்களும் குற்றஞ்சாட்டுகின்றன.

சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, 139,000 மக்கள், பெரும்பாலும் ரோ ஹிங்கிய இனத்தவர்கள், உள்ளக இடப்பெயர்விற்குள்ளாகியுள்ளதாகவும், தொண்டு அமைப்புக்கள் மீது ராகைன் மக்கள் தாக்குதல் நடாத்தியதால் அவை அப்பிரதேசங்களிலிருந்து பின்வாங்கியுள்ளதால், இடப்பெயர்விற்குள்ளாகியுள்ள மக்கள் மாபெரும் மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றன. மக்களுக்கெதிராக வன்முறைகளை மேற்கொண்ட அரசாங்க அதிகாரிகளுக்கும், பாதுகாப்புப் படைகளுக்கெதிராகவும் நடவழக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும், மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டோருக்கு நீதியோ, உண்மையோ, இழப்பீடுகளோ வழங்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது. இடம்பெறும் வன்முறைகளுக்கெதிராகக் கருத்துத் தெரிவிப்பவர்கள் கைது செய்யப்படுவதோடு, அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்துவரும் அடக்குமுறை காரணமாக, ரோஹிங்கிய முஸ்லிம் மக்கள் மியன்மாரை விட்டு வெளியேறி வருகின்றனர். அவர்கள் சட்டரீதியற்று வெளியேறி, படகுகள் மூலமாக அவுஸ்ரேலியா, தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா ஆகிய நாடுகளை நோக்கிச் செல்லுகின்றனர். படகுகளில் கடத்தல்காரர்களால் அழைத்துச் செல்லப்படும் அவர்கள், நாடுகளுக்குள் செல்வதற்கு அனுமதியில்லாத நிலையில், நடுக்கடலில் வைத்து கைவிடப்படுகின்றனர். உறுதியான எண்ணிக்கை இதுவரை கிடைக்காத போதிலும், ஏறத்தாழ 8,000 பேர்வரை கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உண்ணுவதற்கு உணவும், அருந்துவதற்கு சுத்தமான நீரும் இல்லாத நிலையில், படகிலிருப்போர் உயிரிழப்பதோடு, இன்னும் சிலர் மன ரீதியான உளைச்சல்கள் காரணமாக படகுகளிலிருந்து குதித்து உயிரிழப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. இவர்களை அனுமதிக்க, வேண்டுமென்றே மறுப்புத் தெரிவித்து வருவது மாபெரும் மனிதாபிமான நெருக்கடி நிலையைத் தோற்றுவிக்கும் என ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான ஆணையம் (யு.என்.எச்.சி.ஆர்) தெரிவித்துள்ளது. **– செய்தி**

வதந்திகள், திரிபுபடுத்தல், இவற்றை தவிர்த்து விட்டு, உண்மையை கண்டறிவது கடினமான பணியாகும். பல சமயங்களில், பலருக்கு உண்மையை அறிவதில் ஆர்வம் இருப்பதில்லை. படுகொலை செய்யப்பட்ட ரோஹிங்கிய வங்காளிகளின் எண்ணிக்கை 20000 க்கும் குறைவாக இருக்கலாம். பங்களாதேஷ"க்கு அகதியாக சென்றவர்களின் எண்ணிக்கையையும் சேர்த்து, படுகொலை யானவர்கள் என்று கூறி இருக்கலாம். ஆனால், எது சரி? அதை எப்படி உறுதிப்படுத்துவது? ரோஹிங்கியா மக்களின் இனப்படு கொலை பற்றி, பாகிஸ்தானை மையமாகக் கொண்டியங்கும் அமைப்புகள் மிகைப் படுத்தப்பட்ட பிரச்சாரம் செய்வதாக குற்றச சாட்டு இருக்கிறது. பாகிஸ்தான் மட்டுமல்ல, வளைகுடா அரபு நாடுகள், பிரிட்டனில் இருந்து இந்த பிரச்சார வலைப்பின்னல் இயங்கிக் கொண்டிருக்கிறது.

புலம்பெயர்ந்த ரோஹிங்கியா வங்காளிகள், பங்களாதேஷ இஸ்லாமியவாதிகள், மற்றும் பன்னாட்டு இஸ்லாமிய –சர்வதேசியவாதிகள், இதனை ஒரு "முஸ்லிம் இனப்படுகொலையாக" சித்தரித்து, சர்வதேச அளவில் போராடிக் கொண்டிருக்கின்றனர். அவர்களது அணுகுமுறை, தமிழக மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் உணர்வாளர்களின் போராட்ட முறையை பெரிதும் ஒத்திருக்கின்றது. **– கலையரசன்.தா**

ரோஹிங்கிய முஸ்லிம்களின் இன அழிப்பு நம் கவலைக்குரிய ஒன்று. ஆனால் முஸ்லிம் நண்பர்கள் இந்த அடிப்படையில் பௌத்தத்தின் மீதும் பௌத்தர்கள் மீதும் வெறுப்பைச் சுமக்க வேண்டாம்.

பௌத்தம் அன்பையும் அறத்தையும் போதித்த மதம். அதில் வன முறைக்கு இடமில்லை.

இது பர்மிய தேசியவாதத்தின் வெளிப்பாடு. தேசியம் தனது வன்முறைகளை "இனம்", "மொழி", "மதம்" முதலான அடிப்படைகளில் மேற்கொள்கிறது; நியாயப் படுத்துகிறது.

இங்கே அது இந்திய இந்துத்துவவாதிகளைப்போல மதத்தைக் கையில் எடுக்கிறது.

நண்பர்களே நினைவிற் கொள்ளுங்கள்..

நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன் தேசியத்திற்கும் பாசிசத்திற்குமான இடைவெளி மயிரிழைதான்.

**– அ.மார்க்ஸ்**

# பிரதமராக வெற்றியீட்டுவார் மகிந்த
# வீட்டைப் பந்தயம் கட்டுகிறார் பவித்ரா



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று பிரதமராக தெரிவாவார் என முன்னாள் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மீண்டும் பந்தயம் கட்ட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மகிந்த வெற்றியீட்டுவார் எனத் தெரிவித்து பெறுமதி மிக்க தனது வீடு ஒன்றை பந்தயம் கட்டியிருந்தார்.

தேர்தலில் மகிந்த தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அந்த வீட்டை வாக்குறுதி அளித்ததனைப் போன்று பவித்ரா வழங்கியிருக்கவில்லை.

அவ்வாறான ஓர் நிலையில் மீண்டும் மகிந்தவிற்காக தாம் வீடு ஒன்றை பந்தயம் கட்ட உள்ளதாக தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த தோல்வியடைவார் என நான் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை.

இதன் காரணமாகவே நான் எனது வீட்டை பந்தயம் கட்டியிருந்தேன்.

இம்முறை ரணில் விக்கிரமசிங்கவின் குருரங்கள் காரணமாக மகிந்த இலகுவில் பிரதமராக தெரிவாகிவிடுவார்.

அமைச்சுப் பதவிகளை வீடு மகிந்தவை வெற்றியீட்டச் செய்யவே நான் வந்தேன்.

இம்முறையும் மகிந்த வெல்லுவார் என எனது வீட்டை பந்தயம் கட்ட உள்ளேன் என பவித்ரா வன்னியாராச்சி அண்மையில் பலாங்கொடைப் பகுதியில் வைத்து தெரிவித்துள்ளார்.

# அமைதியை சீர்குலைக்கும் வகையில் இலங்கை அரசு செயற்படக்கூடாது
## - சுஷ்மா சுவராஜ் கண்டனம் -



மீனவர் பிரச்சினையில் அமைதியை சீர்குலைக்கும் வகையில் இலங்கை அரசு செயற்படக்கூடாது என இந்தியா கண்டிப்புடன் கூறியுள்ளது.

டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், இந்தியா - இலங்கை இடையிலான மீனவர் பிரச்சினை இரு நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் சார்ந்தது என்றார்.

மனிதாபிமான அடிப்படையில் அணுக வேண்டிய பிரச்சினையில் மீனவர்கள் கொந்தளிக்கும் வகையில் இலங்கை அரசு நடந்து கொள்ளக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

தமிழக மீனவர்கள் ஆண்டிற்கு 65 நாட்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்று இந்தியா விடுத்த கோரிக்கையை அண்மையில் இலங்கை அரசு நிராகரித்தது.

65 நாட்கள் அல்ல 65 மணி நேரம் கூட தமிழக மீனவர்களை தங்களது கடற்பரப்பில் அனுமதிக்க முடியாது என்றும் இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர கூறியதையே இந்தியா மறைமுகமாக கண்டித்துள்ளது.

# மகிந்த மீளவும் வேண்டாம்
# அனுராதபுரத்தில் ஆர்ப்பாட்டம்




முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வருவதை எதிர்த்து அனுராதபுரம் பஸ் நிலையத்திற்கு எதிரில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

மகிந்தவினர் மீண்டும் வேண்டாம் என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை நாம் பிரஜைகள் மற்றும் வீதியின் எதிர்ப்பு ஆகிய சிவில் அமைப்புகளின் ஒன்றியம் ஒழுங்கு செய்திருந்தன.

நல்லாட்சி நடைபெற்று வரும் சூழலில் முன்னாள் ஜனாதிபதி விகாரை மற்றும் கோவில்களுக்குச் சென்று மக்களை ஏமாற்றி, மக்களின் மனதில் மாற்றங்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக நாம் பிரஜைகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# சுதந்திரக் கட்சிக்குள் தீவிரவாதிகள் குற்றம் சாட்டுகின்றார் ரணதுங்க

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பயங்கரவாதிகள் இருப்பதாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மோசடியான நபர்களே 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை எதிர்க்கின்றனர்.

எமது கட்சியிலும் பயங்கரவாதிகள் உள்ளனர். கட்சி ஆட்சிக்கு வருவதை அவர்கள் விரும்பவில்லை.

கொள்ளைகளில் ஈடுபட்ட சில அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றும் போது அதனை எதிர்த்தனர். அதனை குழப்ப முயற்சித்தனர். 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கும் அதே கதிதான் ஏற்பட்டுள்ளது.

வெளியில் இருப்பவர்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கும் ஒரு பிரிவினர் 20 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதை தடுக்க முயற்சித்து வருகின்றனர்.

விருப்பு வாக்கு தேர்தல் முறை காரணமாக சூதாட்டகாரர்கள், கசினோகாரர்கள், குதிரை ஓட்ட பந்தயகாரர்கள், மதுபான வர்த்தகர்கள், கசிப்பு முதலாளிகள், திருடர்கள் கடந்த காலங்களில் நாடாளுமன்றத்திற்கு வந்தனர்.



பணம் இருந்தால் எவரும் நாடாளுமன்றத்திற்கு வரலாம். அதனை நிறுத்தவே 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது எனவும் அர்ஜுன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

# அரச ஊழியர்களுக்கு நிபந்தனை பட்டியல்

உடன் அமுலுக்கு வரும் வகையில், அரச ஊழியர்களுக்கு நிபந்தனைகள் அடங்கிய பட்டியல் ஒன்று அரச பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

சகல அரசாங்க திணைக்களங்கள், காரியாலயங்கள் மற்றும் சபைகளுக்கு அமைச்சினால் இது தொடர்பிலான சுற்றறிக்கை ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் மக்கள் தினம் என்று ஒதுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் சகல அரச ஊழியர்களும் காரியாலயத்துக்கு கட்டாயம் சமுகமளிக்க வேண்டும்.

மக்கள் அனுப்புகின்ற கடிதங்களுக்கு ஒருவாரகாலத்துக்குள் பதில் அனுப்புவதாக அறிவிக்க வேண்டும். அத்துடன் ஒரு மாதத்துக்குள் அக்கடிதத்துக்கு கட்டாயம் பதில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

மக்கள் கடிதங்களுக்கு பதில் அனுப்பும் போது, கேள்விகள் கேட்கப்பட்டுள்ள மொழியிலேயே பதில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

பெரும் நிதியை செலவழித்து மற்றும் அரச சொத்துக்களை பயன்படுத்தி அரச வைபவங்கள் நடத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிபந்தனைகளை மீறுகின்ற அரச ஊழியர்களுக்கு எதிராக கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த புதிய சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மைத்திரியை கொலை செய்ய கோத்தாபய முயற்சி
## - கூறுகிறார் விக்கிரமபாகு கருணாரத்ன -

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்வதற்கான பல முயற்சிகள் இடம்பெற்றுள்ளதாக புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜ பக்ச என அவர் கூறியுள்ளார்.

மேலும் ராஜபக்ஷ அரசாங்கத்தில் இடம்பெற்ற பல்வேறு கொலைகளுக்கு பொறுப்புக் கூற வேண்டியதும் கோத்தாபய ராஜபக்ஷதான் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் கோத்தாபய ராஜபக்ஷவை கைது செய்ய வேண்டும் என தான், அன்று நிறைவேற்று சபையில் வலியுறுத்தியதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மகிந்தவுக்கு வேட்புமனு வழங்குவது சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழுவே
## - டிலான் பெரேரா தெரிவிப்பு -

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவிற்கு வேட்பு மனு வழங்குவதா இல்லையா என்பதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவே தீர்மானிக்க வேண்டுமென கட்சியின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் மத்திய குழு உறுப்பினர் மட்டுமேயாகும்.

மத்திய செயற்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களின் தீர்மானத்தின் அடிப்படையில் மகிந்தவிற்கு பொதுத் தேர்தலில் வேட்பு மனு வழங்கப்பட வேண்டுமென இணங்கப்பட்டால், அதற்கு ஜனாதிபதி எதிர்ப்பு வெளியிட மாட்டார்.

கடந்த காலங்களில் நாட்டை ஆட்சி செய்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்களான மகிந்த ராஜபக்ஷ, சந்திரிக்கா குமாரதுங்க மற்றும் சிறிமாவோ பண்டாரநாயக்க போன்றவர்கள் மத்திய செயற்குழுவிற்கு தீர்மானங்களை எடுக்க அனுமதிக்கவில்லை.

எனினும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மத்திய செயற்குழுவிற்கு தீர்மானம் எடுக்க அவகாசம் வழங்கியுள்ளார். இந்த நடவடிக்கை பாராட்டுக்குரியது என்றார்.

மத்திய செயற்குழுவில் 63 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றார்கள்.

கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா மத்திய செயற்குழுவினை கூட்டி மகிந்தவிற்கு வாய்ப்பு அளிப்பது குறித்து தீர்மானம் எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

# பிலிசர தேசிய திட்டத்தினூடாக விசேட கழிவகற்றும் செயற்றிட்டம்

(கொழும்பு)

பிலிசர தேசிய திட்டத்தினூடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கழிவுகளை வகைப்படுத்தி சேகரிக்கும் நிகழ்வு எதிர்வரும் 5ஆம் திகதி நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

நாட்டின் அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களை தொடர்புபடுத்தி ஒரே நேரத்தில் இந்நிகழ்வு ஆரம்பிக்கப்படவுள்ளது என மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 5ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு இந் நிகழ்வு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வை வெற்றிகரமாக முன்னெடுக்க நாட்டு மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம் என்றும் மாவட்ட மற்றும் மாகாண செயலகங்களின் பிரதானிகள் தலைமையில் இந் நிகழ்வு முன்னெடுக்கப்படும் என்றும் மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

33.தாரணி ஒன்பது சிறிய சதுரங்களை பயன்படுத்தி பெரிய சதுரம் ஒன்றை அமைத்தாள். பெரிய சதுரத்தின் ஒரு பக்கத்தின் நீளம் 9cm எனின் சிறிய சதுரம் ஒன்றின் பரப்பளவு யாது?
1)1சதுரcm	2)9சதுர cm	3)4சதுர cm

34.வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லை தெரிந்து கோடிடுக
தசரதன் தனது குருவான ................ முனிவரின் ஆலோசனைப்படி புத்திரபேற்றை விரும்பி ................ செய்தான்
1) விசுவாமித்திர, தியாகம்	2)வசிட்ட, காகம்	3)மாதங்க, வேள்வி

35.தரப்பட்டுள்ள ஒலிமரபுக்குரிய பிராணிகள் முறையே
அலப்பும் - ரீங்காரமிடும் - பாடும்
1)கரடி - வண்டு, தேன்சிட்டு
2)குரங்கு - தேனீ- வானம்பாடி
3) பன்றி - பருந்து - கிளி

36.முப்பத்துமூவாயிரத்து பதினாறு என்னமட் எண்ணில் உள்ள இலக்கங்களை பின்னாலிருந்து முன்னால் எழுதும் போது கிடைக்கும் எண் யாது?
1)61033
2)16303
3)60133

37.கரன், நரேன் ஆகிய இருவரும் பாடசாலை மைதானத்தில் அமர்ந்திருந்தனர் கரன் அவ்விடத்தில் இருந்து கிழக்கு திசையாக 50m சென்று பின் தனது இடது கைப்பக்கம் திரும்பி 30m தூரம் சென்றான் நரேன் அவ்விடத்தில் இருந்து மேற்குத் திசையாக 100m தூரம் சென்ற பின் தனது வலது கைப்பக்கம் திரும்பி 30m தூரம் சென்றான் இப்போது அவர்கள் இருவருக்கும் இடையிலான தூரம் யாது?
1)200m
2)150m
3)210m

38.1kg தேயிலையை 400 ரூபாவிற்கு வாங்கி ஒவ்வொன்றும் 100g பைக்கற்றுக்காள பொதி செய்து 48ரூபா வீதம் விற்றால் கிடைக்கும் இலாபம் யாது?
1)120 ரூபா
2)90ரூபா
3)80 ரூபா

நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (01)01.1 | 02.3 | 03.3 | 04.3 | 05.1 | 06.2 | 07.1 | 08.1 |
| 09.2 | 10.1 | 11.3 | 12.2 | 13.1 | 14.1 | 15.1 | 16.1 |
| 17.2 | 18.1 | 19.1 | 20.1 | 21. | 22.2 | 23.1 | 24.3 |
| 25. | (02).01. B | 02.A | 03.D | 04.C | 05.G | 06.E | 07.I |
| 08.J | 09.H | 10.F | (03).01.முகம் | 02.விளையாட்டு மைதானம் | 03.சந்தை | | |
| 04.கிளி | (04).01.தங்கை | | 02.இருக்கவும் | 03.ஆஸ்பத்திரி | 04.ஒரு வகையான மலர் | | |
| (05).19.டெங்கு, மலேரியா | | 20.பால், முட்டை | 21.மரங்கொத்திப்பறவை, மைனா | | | 22.துறைமுகம் | |
| 23.நீலம் | 24.களுத்துறை | 25.யாழ்ப்பாணம் | (06).01.1 | | 02.2 | | 03.1 |
| 04. | 05.1 | 06.2 | 07.2 | | 08.1 | | 09.3 |
| 10.1 | 11.3 | 12.1 | 13.2 | | 14.1 | | 15.1 |
| 16.2 | 17.1 | 18.2 | 19.3 | | 20.2 | | 21.1 |
| 22.1 | 23.1 | 24.1 | 25.1 | | 26.2 | | 27.1 |
| 28.2 | 29.1 | 30.1 | | | | | |

இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க
(01)மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக

01.மணியம் என்பவருக்கு வியாபாரத்தில் இலாபத்தை விட நட்டங்களே அதிகமாகும் இந்நிகழ்வை குறிக்கும் பழமொழி யாது?
1)நிழலின் அருமை வெயிலில் தெரியும்
2)சான் அருமை வெயிலில் தெரியும்
3)நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்

02.திருத்தமான கருத்தை தரும் வாக்கியத்தை தெரிவு செய்க
1)களைப்புற்ற விவசாயிகள் மரநிழலில் உள்ள களத்து மேட்டில் இளைப்பாறினர்
2)மரநிழலில் உள்ள களைப்புற்ற விவசாயிகள் களத்து மேட்டில் இளைப்பாறினர்
3)களைப்புற்ற விவசாயிகள் களத்து மேட்டில் உள்ள மரநிழலில் இளைப்பாறினர்

03.சரியான விடையை தெரிவு செய்க
1)காலையில் கிழக்கு சோக்கி செல்பவரின்நிழல் அவரின் இடது கைப்பக்கம் விழும்
2)காலையில் மேற்கு நோக்கி செல்பவரின் நிழல் அவரின் முன்னால் விழும்
3)காலையில் தெற்கு நோக்கி செல்பவரின் நிழல் அவரின் பின்னால் விழும்

04.தரப்பட்டுள்ள நான்கு உருக்களில் ஒன்று வேறுபட்டது வேறுபட்ட உருவின் கீழ் கோடிடுக

1)  2)  3)  4) 

05.அண்ணா விளையாடுவதற்கு மைதானம் சென்றார் அக்கா புத்தகம் இரவல் பெற நூலகம் சென்றார் அண்ணா - அக்கா எனின் மைதானம் - ..................
1)விளையாட்டு	2)புத்தகம்	3)நூலகம்

06.மீன் வியாபாரி ஒருவர் 1kg மீனை நிறுப்பதற்கு 1kg படிக்கல்லுக்கு பதிலாக சமநிறையுடைய 4 தேயிலைப் பைக்கற்றுக்களை பயன்படுத்தினார். தேயிலை பைக்கற்று ஒன்றின் நிறை யாது?
1)250g	2)200g	3)500g

07.என்னிடம் உள்ள பணத்தொகையை போல இருமடங்கு பணம் விமலிடம் உள்ளது விமலிடம் உள்ள பணத்தொகையின் இருமடங்கு ரேவதியிடம் உள்ளது. மூவரிடமும் உள்ள மொத்தப்பணத்தொகை 175 ரூபா எனின் ரேவதியிடம் உள்ள பணத்தொகை யாது?
1)50ரூபா	2)100ரூபா	3)75ரூபா

08.ஆதவனிடம் ஒரு ரூபா நாணயங்களும் இரண்டு ரூபா நாணயங்களும் சம எண்ணிக்கையில் உள்ளன. அவனிடம் உள்ள பணத்தொகை 45ரூபா ஆகும். அவனிடம் உள்ள ஒரு ரூபா நாணயங்கள் எத்தனை?
1)15	2)10	3)18

(02)கீழேயுள்ள ஆங்கில சொற்களுள் இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆங்கில எழுத்துக்கள் அமைந்துள்ள ஒழுங்கில் இலக்கங்கள் எழுதபடவில்லை

| TREE - 5352 | ROAD - 2914 | SOAP- 4167 |
|---|---|---|


09.எழுத்து Dக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கம் யாது?
1)9	2)1	3)4

10. TEA என்னும் சொல்லை குறிக்கும் இலக்கங்கள் எவை?
1) 452 2) 956 3) 354

(03) சொற்கோலத்திற்கு ஏற்ப அடுத்துவரும் சொல்லின் கீழ் கோடிடுக


11. சுளகு → குருவி → வியாதி → ......................
1) விறகு 2) திறமை 3) பகுதி

12. சத்தம் → தம்பதி → பதிகம் → கம்பளி ..............
1) பளிங்கு 2) கம்பம் 3) திருமதி

13. 
முழு உருவின் சுற்றளவு நிழற்றப்பட்ட உருவின் சுற்றளவின் எத்தனை மடங்கு?
1) 4 மடங்கு
2) 3 மடங்கு
3) 2 மடங்கு

14.
```
  5 2 6
- 2 A 9
  B 8 7
```
A, B கட்டத்திற்கு வரவேண்டிய எண்களை தெரிக
1) 4,3 2) 3,3 3) 3,2

15. 0.75 பகுதி நிழற்றப்பட்டுள்ள உருவை தெரிவு செய்க




16. இவர் இந்தியாவில் உள்ள எட்டயபுரத்தில் பிறந்தார் பல சுதந்திர பாடல்களை பாடினார் குழந்தைகளுக்காக பாப்பா பாடல்களை பாடினார் இங்கு கூறப்படும் கவிஞர் யார்?
1) பாரதிதாசன்
2) கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை
3) சுப்பிரமணிய பாரதியார்

17.

| |
|---|
| சுத்தம் தெருவில் செய்கிறாய் சிறந்த தொண்டன் ஆகிறாய் வண்ணக் குயில் குஞ்சுக்கு வளர்ப்பு தாயும் நீயாவாய் |

பாடலில் கூறப்படும் பறவை




18.

| | | | |
|---|---|---|---|
| 10 | ⊠ 5 | ⊂ 9 | |
| 8 | ⊂ 12 | ⊠ 6 | |
| 22 | ⊠? | ⊂ ? | |


எண்கோலத்தில் -?- இக்குறி இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய எண்கள் எவை?
1) 11,15
2) 26,13
3) 17,3

19. குமார் காலையில் வீட்டில் இருந்து மேற்கு நோக்கி சிறிய தூரம் சென்று பின் தனது வலது கைப்பக்கம் திரும்பி சிறிய தூரம் சென்று பின் அங்கிருந்து மீண்டும் தனது வலது கைப்பக்கம் திரும்பி பாடசாலையை அடைந்தான். அதனை காட்டும் உரு எது?



20. அமுதா தனது புகைப்படத்தை பார்த்து கூறிய கூற்றுக்கிடையே சரியான கூற்று எது?
1) இப்படத்தில் இருப்பவர் எனது தாயின் தங்கையாவார்
2) இப்படத்தில் இருப்பவர் எனது தந்தையின் ஒரே மகளாவார்
3) இப்படத்தில் இருப்பவர் எனது அண்ணாவின் மாமியாவார்



21. 
இக்கடிகாரம் 14.20 மணியை அடைய எவ்வளவு நேரம் எடுக்கும்?
1) 1மணி 40 நிமிடம்
2) 1மணி 10 நிமிடம்
3) 1மணி 30 நிமிடம்

22. நேற்று இரவு வானில் சந்திரன் தென்பட்டது ஆகவே நேற்று பௌர்ணமி தினமாகும் என்பது?
1) சரியானது 2) பிழையானது 3) கூறமுடியாது


(04) ஆங்கில எழுத்துக்களுக்கு பெறுமானம் வழங்கப்பட்டு அவற்றின் கூட்டுத்தொகையும் தரப்பட்டுள்ளது

| |
|---|
| M + N = 27 |
| N + P = 30 |
| P + M = 33 |

23. N இன் பெறுமானம் யாது?
1) 16 2) 15 3) 12

24. P இன் பெறுமானம் யாது?
1) 18 2) 20 3) 13

25. பாடசாலை கண்காட்சி ஒன்று 12ஆம் திகதி ஆரம்பமாகியது 14ஆம் திகதி முடிவடைந்தது கண்காட்சி நடைபெற்ற நாட்கள் எத்தனை?
1) 3 நாட்கள் 2) 2 நாட்கள் 3) 4 நாட்கள்

26. 
உருவில் காட்டப்பட்டுள்ள அட்டையை கோடுகளின் வழியே வெட்டுவதன் மூலம் பெறக்கூடிய முக்கோணிகள் எத்தனை?
1) 20 2) 16 3) 18

27. 23 : 59 இன்னும் ஒரு நிமிடம் சென்ற பின் டிஜிட்டல் கடிகாரம் காட்டும் நேரம் யாது?
1) 24 : 00 2) 12 : 00 3) 00 : 00


28.

| |
|---|
| 3 6 5 6 3 9<br>4 9 6 9 3<br>2 9 6 4 6 |

கட்டத்தில் அதிக தடவை எழுதப்பட்டுள்ள இலக்கம் எது?
1) 6 2) 9 3) 3


29. இன்று புதன்கிழமை நேற்றுமுன்தினத்திற்கும் கடந்த வியாழக்கிழமைக்கும் இடையே எத்தனை நாட்கள் இருந்தன?
1) 4 நாட்கள் 2) 3 நாட்கள் 3) 5 நாட்கள்

(05) கீழ்வரும் ஒவ்வொரு பெட்டியிலும் மாபிள்கள் உள்ளன A பெட்டியில் 60 மாபிள்கள் உள்ளன அடுத்துவரும் ஒவ்வொரு பெட்டியிலும் 5 மாபிள்கள் வீதம் குறைவடைந்து செல்கின்றன




30. A பெட்டியில் உள்ள மாபிள்களின் அரைவாசி உள்ள பெட்டி யாது?
1) H 2) G 3) F

31. D, E, F மூன்று பெட்டிகளிலும் காணப்படும் மொத்த மாபிள்கள் எத்தனை?
1) 110 2) 135 3) 120

32. 
ஒரு பக்க நீளம் 1cm நீளமுள்ள சதுரவடிவங்களால் இவ்வுரு ஆக்கப்பட்டுள்ளது இவ்வுருவின் சுற்றளவு யாது?
1) 20cm
2) 18cm
3) 21cm

# தாய், தந்தையை இழந்த மாணவிகளுக்கு லண்டன் நம்பிக்கை ஒளி ஊடாக உதவிகள்



போரினால் தாய் தந்தை இருவரையும் இழந்து வவுனியா டொன்பொஸ்கோ சிறுவர் இல்லத்தின் பராமரிப்பில் இருந்து வரும் 75 மாணவிகளுக்கு லண்டன் நம்பிக்கைஒளி ஊடாக கணனி, உடுபுடவைகள் மற்றும் இதர பராமரிப்பு பொருள் களை வன்னி எம்.பி சிவசக்தி ஆனந்தன், நம்பிக்கை ஒளியின் இணைப்பாளர் சுபாஸ்கரன், காந்தன் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

டொன்பொஸ்கோ தலைமை நிர்வாகி அருட்சகோதரி மெற்றில்லா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட்டது.

டொன்பொஸ்கோ தலைமை நிர்வாகி அருட்சகோதரி மெற்றில்லா, ஆனந்தன் எம்.பியிடம் சிறுவர் இல்லத்தின் நிலைமைகள் தொடர்பில் கூறுகையில்,


"பதினெட்டு வயதை பூர்த்தி செய்துள்ள பெண் பிள்ளைகளும் இங்கு தங்கியிருக்கிறார்கள். குறித்த வயதை கடந்துள்ள 20இற்கும் மேற்பட்ட பெண் பிள்ளைகளை தொடர்ந்தும் சிறுவர் இல்லத்தின் பராமரிப்பில் வைத்திருப்பதில் நடைமுறை சட்டச் சிக்கல்கள் உள்ளன.

அதேவேளை இந்தப் பெண் பிள்ளைகளை சமுகத்தில் பொறுப்பேற்க பெற்றோர், உறவினர்கள் என்று எவரும் இல்லாததால் அவசியம் மற்று மொருவரில் தங்கிவாழ வேண்டிய நிலை உண்டு. எனவே இவர்கள் தொழிற்துறை, வாழ்க் கைத் துணை, உள்ளிட்ட பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். நம்பிக்கையான பாதுகாப்பான திருமண வாழ்க்கையை இவர்களுக்கு அமைத்துக் கொடுப்பதாயின் திருமணச் செலவு களுக்காக (ஒரு பெண் பிள்ளைக்கு) குறைந்தபட்சம் ஒரு இலட்சம் ரூபா வரையில் நிதித்தேவை உளளது." என்று தெரிவித்தார்.

இவர்களது எதிர்காலம தொடர்பாக சமுகத்தில் அங்கம் வகிக்கும் நம் ஒவ்வொருவருக்கும் கூட்டுப் பொறுப்பு இருப்பதால், நாம் ஒவ்வொருவரும் எமது வலுவுக்குட்பட்ட அளவில் முடிந்தவரையான உதவிகளை செய்வோம். டொன்பொஸ்கோ சிறுவர் இல்ல பெண் பிள்ளைகளைப்போன்றே ஏனைய சிறுவர் இல்லங்களின் பெண் பிள்ளைகளும் இவ்வாறான தொழிற்றுறை, வாழ்க்கைத் துணை உள்ளிட்ட பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர் என்று ஆனந்தன் இதன் போது எம்.பி தெரிவித்தார்.

(160)

## ஸ்ரீ ஜெய நீராவியடி வீரகத்தியானின் 11ஆம் நாள் தீர்த்தத் திருவிழா இன்று



தீர்த்தமாடிவரும் எங்கள் நீராவிப்பதி விநாயகனே!
தீர்த்திடுவாய் எங்கள் இன்னல்கள் எல்லாமே!
நேர்த்திகள் பல வைத்து உன்னைக் கைதொழுவோம் கரிமுகனே!
தீர்த்தநாள் தனிலே போக்கிடுவாய் துயரமெல்லாம்!
ஐந்து கரத்தோனே! ஆனை முகத்தோனே!
சித்தி விநாயகனே சீரான வாழ்வு தருவாய்!
திருவீதி வலம் வந்தே திருக்கோலம் காட்டுமையா!
பணிந்தோம் உன்பாதம் ஞான முதல்வனே சரணம் சரணம்!

# சமூக விரோத செயல்களை கட்டுப்படுத்த அனைவருக்கும் விழிப்புணர்வு அவசியம்



சமூகவிரோதச்செயல்களை கட்டுப்படுத்த விழிப்புணர்வு சகலருக்கும் அவசியம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்றஉறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்

யாழ்ப்பாணம் மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்ட விநாயகர் சனசமூக நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ச்னசமூக நிலையத்தலைவர் நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் நாடாளு மன்றஉறுப்பினர் சி.சிறீதரன் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

நமது சமூகத்தின் இன்றைய சூழ்நிலை அருவருக்கத்தக்க விடயங்களை வெளிக்கொண்டு வந்து எமது கடந்த கால புனிதங்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. போதைப்பொருள் பாவனை பாலியல் வன்புணர்வுகள், கொலைகள் வாள்வெட்டுக்கள் என எமது சமூகத்தின் ஒரு தலைமுறை எமது வரலாற்றை மறந்து எங்கேயோ போய்க்கொண்டிருக்கின்றது.இந்த நிலையில் வருங்கால எமது சந்ததிகளின் வாழ்வு பற்றிய ஏக்கம் எல்லோரிடமும் ஏற்பட்டிருக்கின்றது.பல விடயங்களை முளையிலேயே கட்டுப்படுத்த தவறியிருக்கின்ற குற்ற உணர்வு நம் எல்லோருக்கும் உரியது.எமது சமூகம் கடந்த காலத்தில் திட்டமிட்டு ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்டு அவர்களிடம் தவறான சமூக விரோதச்செயல்கள் விதைகப்பட்டு ஊக்குவிக்கப்பட்டு இருக்கின்றது.அதன் விளைவுகளை நாம் இன்று அனுபவிக்கின்றோம். எனவே எமது சமுதாயத்தின் விழிப்புணர்வையும் எமது மொழி, இனம், பண்பாடு பற்றிய பற்றுதலையும் ஏற்படுத்தி எமது இளைய சமுதாயத்தின் சிந்தனைகள் நல்லதொரு திசையை நோக்கி திருப்பப்பட நாம் அனைவரும் பாடுபடவேண்டியவர்களாக இருககின்றோம். இந்தக் கிராம மக்களின் பிரச்சினைகள் தேவைகள் பற்றி இன்று இந்த கலந்துரையாடலில் அறிய முடிந்துள்ளது. அவற்றை தீர்த்துவைக்க என்னால் முடிந்த வரையில் பாடுபடுவேன்.உரிய அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

(160)

# தீர்த்தோற்சவம்

சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தில் இன்று தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.

மேற்படி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த மாதம் 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வந்தது.

தீர்த்தோற்சவமான இன்று மாலை கொடியிறக்கல் வைபவம் இடம்பெறவுள்ளது.

நேற்று தேர்த்திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# பெண் இனத்தை அவமானப்படுத்தியவர்களுக்கு உச்ச தண்டனை வழங்கப்படவேண்டும்

## உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் கோரிக்கை

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வந்த வித்தியா சமூக ஒருமைப்பாட்டுடனும் ஆளுமையுள்ள மாணவியாக வலம் வந்து கொண்டிருந்தவர். அவர் செய்த பாவம் என்ன? பெண்ணாக பிறந்தது தப்பா? அல்லது புங்குடு தீவில் பிறந்ததுதப்பா..? ஈனப்பிறவிகளின் ஈவிரக்கமற்ற பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்பட்டு தனது உயிரை மாய்த்துள்ளார். மானம் உள்ள எமது இனம் வீழ்த்தப்படாத வீரத்தையும் மண்டியிடாமானத்தையும் உலகம் போற்றும் பண்பாட்டையும் கொண்ட நம்மவர்களா இந்த கொடூர செயலை செய்தார்கள் என்று நினைக்கும்போது அவமானமாக இருக்கின்றது. என உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இச் செயலானது மனிதநேயத்துக்கு அப்பாற்பட்டது. இவ்வன்செயலை செய்த காமுகர்களை சட்டம் தண்டிப்பதுடன் இனிவரும் காலங்களில் எவருமே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடாத அளவுக்கு தண்டனை அமைய வேண்டும் வித்தியா என்னும் மாணவியின் உடல் மட்டும் சிதைக்கப்படவில்லை அவள்து சிந்தனைகள், எதிர்கால கனவுகளும் சிதைக்கப்பட்டதுடன் ஒட்டுமொத்த. பெண்களுக்கும் சவாலாக அமைந்துள்ளது.

தமிழினம் தன்மானத்துடன் வாழும் இனம். என்பதை சில கயவர்களின் செயற்பாட்டால் காயத்தை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்கா தேசத்திற்கு விவேகானந்தா சென்றபோது அத்தேசத்தை சேர்ந்த ஆண்மகன் ஒருவர் கேள்வியொன்றை முன்வைத்தார். அதாவது தமிழ் ஆண்களுக்கும் எமக்கும் என்ன வேறுபாட்டை காண்கின்றீர்கள் எனக்கேட்டபோது நீங்கள் தாயை தவிர ஏனைய பெண்களை மனைவியாக பார்க்கிறீர்கள் தமிழ் ஆண்கள் மனைவியை தவிர ஏனைய பெண்களை தாயாக பார்க்கின்றார்கள் எனப் பெருமைப்பட்டவர் ஆனால் இன்று நடந்தவை தமிழினத்தை கேவலப்படுத்தி வேதனைப் படுத்தியுள்ளது.

இந்த ஈனப்பிறவிகள் பூவுலகில் வாழத்தகுதியற்றவர்கள்.வித்தியா என்ற பெண்ணை உடல் ரீதியாகவும் ஒட்டுமொத்த பெண்களை உளரீதியாகவும் பாதிப்படையச் செய்துள்ளார்கள் மனிதனுக்குத்தான் சட்டம் விலங்குகளுக்கு அல்ல எனவே இவர்கள் மனித நேயத்துக்கும் மனித பண்பாட்டிற்கும் அப்பாற்றப பட்டவர்கள் இந்த காமுகர்கள் இவர்களுக்கு விலங்குகளுக்கு வழங்கும் வேள்வி தண்டனையை வழங்கலாம்.

வித்தியா என்னும் மாணவியை போன்று இன்னொரு மாணவிக்கு இந்த நிலைமை வராது சமூகத்தில் உள்ளவர்களும் சட்டமும் உறுதி வழங்கி செயற்படவேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(92)

# கும்பிளான் காளியம்மனுக்கு சிறப்புற நடைபெற்ற சங்காபிஷேகம்

சைவமும் தமிழும் சலசலத்து ஓடும் குப்பிளான் பதியில் வீற்றிருந்து தன்னை நாடி வரும் அடியவரின் துயர் நீக்கி வாழ வைக்கும் காளியம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதி நாளான சங்காபிஷேக உற்சவம் நேற்று முன்தினம் மு.ப. 10 மணி முதல் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த ஆலயத்தின் அலங்கார உற்சவம் கடந்த 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்று வந்த நிலையிலேயே பத்தாம் நாளாகிய நேற்று முன்தினம் சங்காபிஷேக உற்சவம் நடைபெற்றது.

மு.ப. 10 மணிக்கு சர்வலோக நாயகியான காளியம்பாளுக்கு கும்பபூசை மற்றும் விசேட அபிஷேக பூசைகள்,108 சங்காபிஷேகம் என்பன இடம்பெற்று அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகியது.

இதன் போது பெண் அடியவர் ஒருவர் ஊஞ்சற் பாட்டு இசைக்க அம்பாளை ஊஞ்சலில் வைத்து ஆடிய காட்சி உருகாத மனங்களையும் உருக வைத்தது. இதன் போது சில அடியவர்களின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக,அரோகராக் கோஷத்துடன் குறையிரந்து தொழுதமையையும் காண முடிந்தது.


வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து பக்தர்கள் புடை சூழ அம்பாள் அலங்கார ரூபினியாக ஆலயத்தை வலம் வந்தது.

அம்பாள் இருப்பிடம் வந்தடைந்ததைத் தொடர்ந்து பகல் 1 மணியளவில் தானங்களில் சிறந்த தானமாகிய அன்னதானம் அடியவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

– டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்த்தொகுதியில் –

# சூடுபிடிக்கும் இடைத்தேர்தல்

## வாக்கு சேகரிக்கும் பன்னீர்ச் செல்வம்



சென்னையில் உள்ள டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி இடைத் தேர்தலில் அ.தி.மு.க தனது பிரசாரத்தைத் தொடங்கியுள்ளது.தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்காக காலி செய்யப்பட்ட ஆர்.கே. நகர்த் தொகுதிக்கு எதிர்வரும் 27ஆம் திகதி இடைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த இடைத் தேர்தலை தி.மு.க, பா.ம.க, த.மா.கா, விடுதலை சிறுத்தைகள், புதிய தமிழகம் ஆகிய கட்சிகள் புறக்கணித்து உள்ள நிலையில் காங்கிரஸ், பா.ஜ.க, தே.மு.தி.க, ம.தி.மு.க கட்சிகளின் நிலைப்பாடு தெரியவில்லை.

டிராபிக் ராமசாமி போட்டியிடுவதாக அறிவித்துள்ள நிலையில், அவரை பொது வேட்பாளராக்க வாய்ப்புள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் அ.தி.மு.க தேர்தல் பணிமனை திறப்பு விழா ஆர்.கே. நகர்த்தொகுதிக்கு உட்பட்ட தண்டையார்பேட்டை அப்பலோ மருத்துவமனையில் நடந்துள்ளது.

அவைத்தலைவர் இ.மதுசூதனன் தலைமை தாங்கிய விழாவில், ஓ.பன்னீர்ச்செல்வம் உள்பட அமைச்சர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் பங்கேற்றுள்ளனர். இதையடுத்து தண்டையார்பேட்டையில் உள்ள பெரிய பாளையத்தம்மன் கோவிலில் சிறப்பு பூஜை நடாத்திவிட்டு, தேர்தல் பிரசாரத்தை அமைச்சர் ஓ.பீன்னீர்ச்செல்வம் தலைமையில் அ.தி.மு.க.வினர் மேற்கொண்டுள்ளனர்.

மேலும், சாலையில் சென்ற பேருந்துகளில் இருந்த பயணிகள், சாலைகளில் சென்ற வாகன சாரதிகள் கடைகளில் இருந்த வியாபாரிகள் என அனைவரிடமும் ஓ.பன்னீர்ச்செல்வம் உள்ளிட்டோர் வாக்கு சேகரித்துள்ளனர்.

# சிரியாவில் வான் தாக்குதல் 72 பொதுமக்கள் உயிரிழப்பு




சிரியாவில், ஐ.எஸ்.ஐஎஸ். ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நகர் ஒன்றில் அந்நாட்டு அரச விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் 72இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். சன நெருக்கடியான சந்தைப் பகுதியில் சிரிய அரச ஹெலிகொப்டர்கள், பீப்பாய்க் குண்டுகளை வீசியதில், பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளிட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு மாகாணமான அலப்போவில் உள்ள, அல்-பாப்பில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில், பாதிக்கப்பட்டோர் அனைவரும் பொதுமக்கள் என ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். அலப்போ நகரில், ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில், இதனை ஒத்த தாக்குதல் ஒன்று இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், அதிகளவிலானோர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சிரிய அரசாங்கம், பீப்பாய்க்குண்டுகளை பாவிப்பது ஒரு போர்க்குற்றம் என மனித உரிமை செயற்பாட்டு குழுக்கள் கண்டனம் வெளியிட்டுள்ளன.

# திருமணத்திற்குச் சென்றோர் வீதி விபத்தில் உயிரிழப்பு



உத்தரப் பிரதேச மாநிலம், ரேபரேலியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

உறவினர்களின் திருமண விழாவில் பங்கேற்பதற்காக வாகனம் ஒன்றில் பயணித்த நிலையில் இவ்விபத்து இடம்பெற்றுள் ளது. குறித்த வாகனமும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதிலே இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் காயமடைந்த ஒருவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# கட்டாரில் பலியாகும் இந்திய தொழிலாளர்கள்

## ஒரே ஆண்டில் 279 பேர் உயிரிழப்பு



கட்டார் நாட்டிற்கு வேலைக்குச் சென்ற 279 இந்திய கட்டட தொழிலாளர்கள் மரணமடைந்திருப்பதாக, சர்வதேச மன்னிப்புசபையின் (Amnesty) ஆய்வு தெரிவித்துள்ளது.

சர்வதேச மன்னிப்பு சபை (Amnesty) "Promising Little, Delivering Less: Qatar and Migrant Abuse ahead of the 2022 Football World Cup" என்ற தலைப்பில் ஆய்வு ஒன்றை வெளியிட்டுள்ளது.

கட்டாரில் எதிர்வரும் 2022ஆம ஆண்டு, (பிபா) உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கவுள்ளது. இந்நிலையில் கட்டாரில் இதற்கான கட்டமைப்பு வசதிகள் நடந்துவருகிறது. அந்த வசதிகளை கட்டமைப்பு செய்வதற்காக கட்டட தொழிலாளர்கள், பெரும்பாலும் இந்தியாவிலிருந்து தான் அதிகளவு சென்றுள்ளனர். இதுகுறித்து கட்டாரிலிருந்து வந்த கங்கா பிரசாத் என்பவர் கூறுகையில், எனக்கு அங்கு, அடையாள அட்டை எதுவும் கொடுக்கப்படவில்லை.

இதனால் வேறெங்கும் வெளியே செல்ல முடியாமல் கட்டுமான தளம், மற்றும் தொழிலாளர்களுக்கான நாற்றமடிக்கும் அறையிலேயே என் காலம் கழிந்துவிட்டது. என் கடவுச்சீட்டும் அவர்களின் கையிலேயே இருந்ததால், வேறு எங்கும் சென்று வேலை தேட முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது என்று தெரிவித்துள்ளார்.

கடந்த 4 ஆண்டுகளில் மொத்தம் 1000 இந்திய தொழிலாளர்கள் கட்டாரில் மரணமடைந்துள்ளனர்.மேலும், கடந்த 2014 ஆம் ஆண்டில் மட்டும் வேலைக்குச் சென்ற 279 இந்திய கட்டட தொழிலாளர்கள் மரணமடைந்திருப்பதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

# தடைவிதிப்பு

ஐரோப்பிய நாடுகளின் 89 அரசியற் தலைவர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு ரஷ்யா தடை விதித்துள்ளது. உக்ரைன் விவகாரத்தில் மேற்கத்தைய நாடுகளின் செயற்பாடுகளால் கோபமடைந்த ரஷ்யா இவ்வாறு தடைவிதித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது. இந்த தடை உத்தரவில் பிரித்தானிய முன்னாள் துணைப் பிரதமர் (Nick Clegg) நிக் கெல்ஜ், முன்னாள் பாதுகாப்பு செயலாளர் (Sir Malcolm Rifkind) சேர்மல்கோலம் றிப்கின்ட் உட்பட பலருக்கு இவ்வாறு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

# இரட்டைக்காரில் குண்டு வெடிப்பு 15 ஈராக்கியர்கள் உயிரிழப்பு

ஈராக்கில் இடம்பெற்ற இரட்டைக் கார் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது. ஈராக் தலைநகர் பாக்தாத்திலுள்ள கிறிஸ்டல் ஹோட்டல் அருகே இரண்டு கார்களில் பொருத்தப்பட்டிருந்த குண்டுகள் வெடித்துள்ளன.

இதில் 10 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், படுகாயமடைந்த 27 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஐந்து பேர் சிகிச்சை பலனளின்றி உயிரிழந்ததையடுத்து, உயிரிழப்பு 15 ஆக அதிகரித்துள்ளதாக அந்நாட்டு வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.



இந்த குண்டுவெடிப்பிற்கு ஐ.எஸ்.ஐ.எஸ் உள்ளிட்ட எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுததார அமைப்பு, வடக்கு ஈராக் மற்றும் சிரியாவின் தெற்குப் பகுதிகளை கைப்பற்றிய நிலையில் இஸ்லாமிய தேசம் என பெயரிட்டு ஆட்சி செய்து வருகின்றமை குறிப பிடத்தக்கது.

# தலிபான்களின் தாக்குதலில் 5 பொலிஸார் உட்பட 13 பேர் பலி



ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆயுததாரிகள் மேற்கொண்ட தாக்குதலில் 5 பொலிஸார் உட்பட 13 பேர் உயிரிழந்துள்ளனர் ஆபகானிஸ்தானில் தலிபான் ஆயுததாரிகள் இராணுவம் மற்றும் பொலிஸார் மீது அடிக்கடி தாக்குதல் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் சமன்கான் மாகாணம் டாரா மாவட்டத்தில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடிகள் மீது தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இதன்போது, அங்கிருந்த பாதுகாப்பு படை வீரர்கள் தலிபான் ஆயுததாரிகளுடன் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டதுடன், இருதரப்புக்கும் இடையே கடும் போர் இடம்பெற்றது.

இந்தப் போரில் 5 பொலிஸார் உட்பட 13 பேர் உயிரிழந்த அதேவேளை, காயமடைந்த 10 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# கூட்டுறவுச் சங்கங்களை மீட்க மாகாணசபை முன்வரவேண்டும்

## - டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பல பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடிகளுக்கு உள்ளாகி வருவதாகத் தெரியவருகிறது.

பல சங்கங்கள் ஊழியர்களுக்கு ஊதியங்களை வழங்க இயலாத நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களை இவ்வாறான நிலையில் இருந்து மீட்டு, அவற்றை வலுப்படுத்தும் செயற்பாடுகளை மாகாண சபை முன்னெடுக்க வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், யுத்தம் நிலவிய கடந்த காலங்களில் யாழ்.மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எமது மக்களுக்கு ஆற்றியுள்ள பணிகள் மகத்தானவை. இதனை எவராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. எனினும் இன்று இந்த கூட்டுறவுச் சங்கங்களின் நிலை மிகவும் வேதனையைத் தருவதாக அமைந்துள்ளது.

மத்திய அரசில் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சராக நான் பணியாற்றிய காலத்தில் கூட்டுறவுத் துறையின் வளர்ச்சி தொடர்பில் பல நடவடிக்கைகளை எடுத்திருந்தேன். அது மட்டுமல்லாது, ஏனைய அமைச்சுப் பொறுப்புக்களில் இருந்த நிலையிலும் எமது கூட்டுறவுத் துறை வளர்ச்சியிலும் எனது பங்களிப்பு இருந்தே வந்துள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள 24 கூட்டுறவுச் சங்கங்களில் அநேகமானவை பொருளாதார ரீதியில் பெரும் வீழ்ச்சி கண்டவையாகவே உள்ளன. எனவே, இவற்றை வலுப்படுத்தி, மீளக் கட்டியெழுப்புவதற்கும், மாற்றுத் திட்டங்களின் ஊடாக அவற்றின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கும் வடக்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல், எமது கூட்டுறவுச் சங்கங்களினதும், அவற்றின் பணியாளர்களினதும் எதிர்காலம் இல்லாது போகக் கூடிய நிலையே உருவாகும் எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அடிப்படை வசதிகளைக் கோரி மறவன்குள மக்கள் ஆர்ப்பாட்டம்



அடிப்படை வசதிகள் உட்பட கிராமத்தின் அத்தியாவசிய தேவைகளை பெற்றுத்தரக் கோரி வவுனியா மறவன்குளம் மக்கள், மறவன்குளம் பொதுநோக்கு மண்டபத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியாவிலிருந்து சுமார் 15 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இக்கிராமத்தில் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்ற போதிலும் இதுவரை தமக்கான அடிப்படை வசதிகள் எதையும் செய்துக்கொடுக்கவில்லை என அம்மக்கள் தெரிவித்தனர். சில நிர்வாக அமைப்புகள் பக்கச்சார்பாக செயற்படுவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். -

# பதவியேற்றார் இளஞ்செழியன்

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக நேற்று திங்கட்கிழமை காலை மாணிக்கவாசகம் இளஞ்செழியன் பதவி ஏற்றுக்கொண்டார். காலையில் நீதிமன்ற வளாகத்துக்கு வந்த இளஞ்செழியனை நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற அலுவலர்களால் வரவேற்கப்பட்டார். இதையடுத்து சத்தியப்பிரமாணம் செய்து தனது பதவியை அவர் ஏற்றுக்கொண்டார். மிகவும் எளிமையான முறையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

# ஒலுமடு பிரதேசத்தில் சிறுபோகம் விஸ்தரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒலுமடு பிரதேசத்தில் மே மாதம் இரண்டாம், மூன்றாம் வாரங்களில் பெய்த மழை காரணமாக ஏற்கனவே திட்டமிட்டிருந்த சிறுபோகச் செய்கையை விட மேலும் 83.5 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள குளங்களின் கீழ் 155 ஏக்கர் சிறுபோக செய்கைக்கு தீர்மானிக்கப்பட்டு, அதற்கான கூட்டங்கள் நடத்தப்பட்டு பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையின் மே மாதத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் வாரங்களில் பெய்த மழை காரணமாக சிறிய, நடுத்தர குளங்களின் நீர்மட்டங்கள் அதிகரித்தன. இதனையடுத்து, திருமுறிகண்டி குளத்தின் கீழ் 10 ஏக்கரும் தச்சடம்பன் குளத்தின் கீழ் 23 ஏக்கரும் ஒலுமடுகுளத்தின் கீழ் 29 ஏக்கரும் கற்கிடங்கு குளத்தின் கீழ் 15 ஏக்கரும் ஐயன்குளத்தின் 6.5 ஏக்கரும் சிறுபோகச் செய்கைகளுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒலுமடுவில் மொத்தமாக 238.5 ஏக்கர் நிலப்பரப்பில் தற்போது சிறுபோக செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# படையினருக்கு அரசியலில் இடமில்லை

(கொழும்பு)

பாதுகாப்புப் படையினர் அரசியல் பகடை காய்களாக பயன்படுத்தப்பட மாட்டார்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிவில் பாதுகாப்புப் படையினரை தனது தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புப் படையினர் அரசியல் பகடைக் காய்களாக எதிர்வரும் காலங்களில் பயன்படுத்தப்பட மாட்டார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அநுராதபுரத்தில் நடைபெற்ற பிரசாரப் பணிகளில் 15000 சிவில் பாதுகாப்புப் படையினர் அழைத்துச் செல்லப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிவில் பாதுகாப்புப் படையினர் முப்படையினருடன் இணைந்து செயற்படுவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

## இது சட்ட...

பிரிவுக்கான அமைச்சரவை தீர்மானம் தெளிவாக சட்டத்தை மீறும் செயலாகும் என்று சரத் என் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

நிதிக்குற்றச்சாட்டுக்கள், ஊழல்கள் மற்றும் அதிகாரமற்ற திட்டங்கள் என்பன தொடர்பில் பிறிதான பிரிவுகள் விசாரணைகளை மேற்கொள்ள முடியும்.

குறிப்பாக கணக்காய்வாளர் நாயகத்துக்கு அதனை மேற்கொள்ள முடியும். இதற்காக பொலிஸ் பிரிவு ஒன்றை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

## வருவார்...

ஆட்சிமாற்றத்தை அடுத்து நல்லாட்சி அரசாங்கம் இவ்வாறான சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதியின் இலங்கை விஜயம் தொடர்பாக முதற்கட்ட பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா மேலும் குறிப்பிட்டார்.

# நீதிமன்றத்தாக்குதல் விளக்கமறியல் நீடிப்பு இருவருக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதவான் நீதிமன்றத்தின் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்களில் 45 பேரை எதிர்வரும் 9 ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி பொன்னுத்துரை சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் 20 ஆம் திகதி புங்குடுதீவு மாணவியின் கொலைக்கு எதிராக யாழ். குடாநாட்டில் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்தப் போராட்டத்தின் பின்னர் யாழ்.நீதிமன்றத்திற்கு முன்பாக கூடியிருந்த இளைஞர்கள் யாழ்.நீதிமன்றின் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன், யாழ்.சிறைச்சாலை வாகனத்தின் மீதும் தாக்குதல் மேற்கொண்டனர்.

அவ்வாறு ஏற்பட்ட கலவரத்தின் போது, 130 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். 4 பிரிவுகளாக குறித்த இளைஞர்கள் மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த கலவரத்தில் ஈடுபட்ட 47 பேர் நேற்று திங்கட்கிழமை ஆஜர் படுத்தப்பட்டனர்.

மேற்படி 47 நபர்களில் 16 வயதிற்குட்பட்ட இரு சிறுவர்கள் 5 இலட்சம் பெறுமதியான 3 ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய 45 பேரையும் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.இந்த 45 பேரில் பாடசாலை மாணவர்களுக்காக நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமாகிய எம்.சுமந்திரன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமாகிய எஸ்.சயந்தன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

பாடசாலை மாணவர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் இருவரும் பிணையில் விடுவிக்குமாறு கோரியிருந்தனர். பாடசாலை மாணவர்களாயின் கல்வி பயிலும் பாடசாலை அதிபரிடம் சத்தியக்கடதாசி பெற்று மன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை, குறித்த 47 பேரில் 15 பேருக்கு நீர்கொழும்பினைச் சேர்ந்த சட்டத்தரணி முஜீர் ஆஜராகியிருந்தார். மீண்டும் விளக்கமறியலில் தமது பிள்ளைகள் செல்வதை தாங்க முடியாத பெற்றோர்கள் நீதிமன்றத்தின் முன்பாக நின்று கதறி அழுதனர். தமது பிள்ளைகளை விடுவிக்குமாறு பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

கலவரத்தின் போது கைது செய்யப்பட்ட ஏனையவர்களுக்கான வழக்கு விசாரணை எதிர்வரும் 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் யாழ்.நீதவான் நீதிமன்றில் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (25)

## விளக்க...

குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதுடன், அவர்களின் மரபணு பரிசோதனை தொடர்பிலும் ஆராய்ந்துள்ளது.

மேலும் சுவிஸ் குமார் என்ற சந்தேக நபர் கொழும்பிற்கு தப்பிச் சென்றமை குறித்தும் விசாரணை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, இவர்கள் ஆஜர் செய்யப்பட்டமையைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை நீதிமன்றம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை, புங்குடுதீவு மாணவியின் குடும்பத்தினர் சர்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா உள்ளிட்ட 6 சட்டத்தரணிகள் கொண்ட குழுவினர் முன்னிலையாகினர்.


இந்த வழக்கு விசாரணைகளை காலதாமதம் செய்யாமல் முடிக்கவேண்டும் என மாணவி தரப்பு சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

வித்தியா படுகொலை செய்யப்பட்ட இடத்திலிருந்து மீட்கப்பட்ட தடயப் பொருள்களையும் பிரேத பரிசோதனை மூலம் பெறப்பட்ட தகவல்களையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் கையளிக்கும்படி நீதவான் இதன்போது உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களின் இரத்த மாதிரிகளை சிறைச்சாலை ஆணையாளர் ஊடாகப் பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்கும் படியும் உத்தரவு பிறக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்களின் கைத்தொலைபேசி அழைப்புக்களையும் அதில் பதிவாகியுள்ள ஏனைய தகவல்களையும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி குற்றப்புலனாய்வுத் துறையினருக்கு உத்தரவிட்டார்.

மக்களால் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சுவிஸ் குமார் என்று அழைக்கப்படும் சந்தேக நபர், இவர் எவ்வாறு வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்டார் என்பது குறித்து சட்டத்தரணி தவராசா கேள்வியெழுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

# யாழ். நூலக எரிப்பு நினைவு நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டு முப்பத்து நான்கு வருடத்தை நினைவு கூரும் நிகழ்வு நேற்று பகல் யாழ்ப்பாணம் பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரியின் அதிபராக இருந்து நூலகம் எரிக்கப்படுவதை அவதானித்ததும் மரணத்தை தழுவிக்கொண்ட ஹயசிந் சிங்கராயர் டேவிற் அடிகளாரிதும் (தாவீது அடிகள்) மற்றும் பொது நூலகத்தின் தோற்றத்திற்கு காரணமாக இருந்த புத்தூர் சக்கடத்தார் க.மு.செல்லாப்பாவின் திருவுருவப்படத்திற்கும் மலரஞ்சலி செலுத்தி நினைவுச் சுடர் ஏற்றி அஞ்செலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் பிரதம நூலகர் திருமதி சதாசிவமூர்த்தி சுகந்தினி மற்றும் உதவி நூலகர்கள் நூலக ஊழியர்கள் உட்பட வாசகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள். யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டமை சம்பந்தமாக தங்க முகுந்தனினால் வெளியிடப்பட்ட 'உண்மை நிகழ்வுகளின் தொகுப்பு' என்னும் நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# பள்ளிவாசல் தாக்குதல்; சத்தியாக்கிரகப் போர்



(கொழும்பு)

பொரலஸ்லைப் முஸ்லிம் பள்ளிவாசல் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களை உடனடியாக கைது செய்யுமாறு வலியுறுத்தி பள்ளிவாசல் முன்பாக நேற்று சத்தியாக்கிரக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய சமாதான முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று பிற்பகல் 12:30 மணியளவில் இந்தப் போராட்டம் ஆரம்பமானது.

இதன்போது குறித்த இடத்துக்கு பிற்பகல் 1:30 மணியளவில் விஜயம் செய்த மேல் மாகாணசபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், கொழும்பு தெற்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரொசான் டயஸ் உடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

# வீதி விபத்தில் பெண் மரணம்



மன்னார் பிரதான பாலத்தடியில் நேற்று அதிகாலை இடம் பெற்ற விபத்தில் பெண் ஒருவர் பலியானார் எட்டுப் பேர் காயமடைந்தனர்.

கற்பிட்டியில் திருமண நிகழ்வொன்றுக்குச் சென்று விட்டு நேற்று முன்தினம் இரவு புறப்பட்ட வடி ரக வாகனம் ஒன்று நேற்று அதிகாலை மன்னார் தீவையும் நிலப்பரப்பையும் இணைக்கும் பிரதான தாம்போதியில் விபத்துக்குள்ளாகியதில் ஒரு பெண் பலியானதுடன் குறித்த வாகனத்தில் பயணித்த எட்டுபேர் காயமடைந்துள்ளனர்.

பாலத்தை அண்டிய தாம்போதி பகுதியில் வேகமாக வந்துகொண்டிருந்த வடி ரக டிப்பர் வாகனம் வேகக் கட்டுபாட்டை இழந்ததினால் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்ததினாலேயே விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார், எருக்கலம்பிடியை சேர்ந்த முனாஸ் முனிதா (வயது 52) என்வரே சம்பவத்தில் உயிரிழந்தார். காயமடைந்த எட்டு பேரில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். எம்.றிஸ்வாண் (வயது 50), எப்.ஜஸ்மிலா (வயது 54), எம்.சகானா(வயது 9), ஆர்.றம்சா(வயது 19), ஆர்.தஸ்லினா(வயது 50), ஆர்.தஸ்விமா(வயது 15), ஆர்.றிஸ்கா(வயது 10), எஸ்.எச்.முனபர்(வயது 37) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.


# "உயில்" கவிதை நூல் நேற்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பல்கலைக்கழக நூலக உதவியாளர் சு.நவநீதகிருஸ்ணன் எழுதிய உயில் என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் மண்டபத்தில் நூலாசிரியர் தலைமையில் நடைபெற்றது.

மங்கள விளக்கினை எஸ். சிவபாதசுந்தரம் மற்றும் குணாளன் ஆகியவர்கள் ஏற்றி வைத்தார்கள். இந்த நிகழ்வில் வரவேற்புரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பிரதம நூலகர் ஸ்ரீஸ்காந்த லட்சுமி அருளானந்தம் நிகழ்த்தினார் நூல் அறிமுகவுரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் சி. ஸ்ரீசற்குணராசா நிகழ்த்தினார்.

நூலின் முதற்பிரதியை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் சி. ஸ்ரீசற்குணராசா வெளியிட்டு வைக்க யாழ்ப்பாணம் மாநகர பொது நூலகத்தின் முன்னாள்



நூலகர் எஸ். தனபாலசிங்கம் பெற்றுக் கொண்டார்.

நூலின் மதிப்பீட்டுரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்துறை தலைவரும் ஓய்வு நிலை பேராசிரியருமான எஸ். சிவலிங்கராசா நிகழ்த்தினார்.

# வெளியிடப்பட்டது "விளைவேலி பதிகம்"

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் போற்றி "விளைவேலிப் பதிகம்" வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

மயிலிணி கலைஞர் பா.பாலசந்திர சர்மா (பிறை) வினால் விளைவேலியின் அழகையும், அமைதியையும் ஆனைமுகத்தானின் அருளையும் 9 பதிகங்களாக புனைந்து விளைவேலி மருதடியான் மீது பாடப்பட்டுள்ளது.

இப்பதிகம் ஆதினத்தின் பிரதம குரு சிவஸ்ரீ கு.ஜெகதிஸ்வரக்குருக்களால் கைநூலாக வெளியீடு செய்யப்பட்டுள்ளது. (இ)

# நாடு தழுவிய கண்டனப்போர்


(கொழும்பு)

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான பாலியல் வன்முறைகளை எதிர்த்து ஆரம்பிக்கப்பட்ட நீதிக்கான பயணம்" என்ற பிரசார செயற்பாட்டின் ஒரு கட்டமாக நேற்று நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களிலும் கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கொழும்பில் நீதி அமைச்சுக்கு முன்னால் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டதாக மனித உரிமைகள் செயற்பாட்டாளர் நளினி இரட்ணராஜா தெரிவித்துள்ளார்.

இதில் மனித உரிமை ஆர்வலர்கள், பெண் உரிமை ஆர்வலர்கள் சட்டத்தரணிகள், ஊடகவியலார்கள், கல்விமான்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, புங்குடுதீவு மாணவியின் கொலைச் சம்பவத்தின் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்




வைத்து நாடு முழுவதும் பெண்கள் அமைப்புகள் நேற்று ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தன.

கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கண்டி உள்ளிட்ட நாட்டின் பல்வேறு நகரங்களில் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

வவுனியாவில் நேற்று அமைதி ஊர்வலங்கள் பல இடம்பெற்றுள்ளதோடு, மட்டக்களப்பில் பெண்களின் பாதுகாப்பை வலியுறுத்தி அமைதி வழி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

மேலும், சிறுவர்கள், பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்குமாறும், புங்குடுதீவுப் படுகொலைக் குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனையை வழங்குமாறும் வலியுறுத்தி அம்பாறையிலும் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.



வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் நேற்று வருடாந்த பொங்கல் உற்சவம் மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்றபோது பக்தர்கள் பல்லாயிரக்கானவர்கள் திரண்டிருந்தனர்

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூன் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.